உ
சிவாயநம

# சந்திர தீபம்

தவத்தைப் பெருக்கவும், தர்மத்தைக் காக்கவும், சிவத்தைப் பேணவும், திருவருள் பூண்டது.

இதழ் - 1 காலயுத்திவருஷம் ஆனி மாதம் 23 ம் திகதி வெள்ளிக்கிழமை [7 - 7 - 1978] சுடர் - 15

## உலகின் இயல்பு வேத நூல் ஒழுக்கம். நிலவும்
## மெய்நெறி சிவநெறி
### என்றதை வைகை ஆற்றில் ஏடிட்டு காட்டினுர்
## எம் பெருமான் திருஞானசம்பந்தர்

சிவநெறி மெய்யாவது. ஆகவே உண்மை இல்லாத வழி அது சிவநெறியாகாது. எங்கு கரவு இல்லையோ திருகுதாளம் இல்லையோ தற்பெருமை காமம் குரோதம் முதலியன இல்லையாயோ அதுதான் சிவநெறி இந்த உண்மை நின்ற பெரிய நிலையை அடையவே முயன்றனர் எம்பெருமக்கள். அந்த முயற்சியில் இடை இடை சங்கடங்கள் வருவன. போலியும் பொய்மையும் பேச்சும் பாடலும் ஆடலும் பொய்மையும் மெய்போலக் காட்டி காலம் தோறும் பெருமாற்றங்களை விளைவிப்பன. ஆனல் உண்மை என்றும் பங்கப்படாதது. அந்த உண்மையான நெறியை அன்று 12 பாடலால் பாடியருளி அப்பதிகம் எழுதிய ஏட்டைப் பாண்டிய அரசன் முன் வைகை ஆற்றில் இட்டு நீரில் எதிர்ந்தோடச் செய்து சிவநெறி உண்மையாவது எனக் காட்டினுர் எம்பிரான் சம்பந்தர். இறைவனுடைய அருள் பெறும் வகையும் அவர் அடையாளமும் உலக சேமத்திற்குரிய நெறிகளும் நீதியும் கொண்ட வேதநெறியின் சாரமாகும் அந்த திருப்பாசுரம் என்னும் அப்பாடலைக் கீழே தருகின்றோம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

உண்மையும் தெய்வ நெறியும் பத்திமையும் அன்பும் அருளும் சிறக்கும் அந்தணர்கள் என்றும் வாழ்க. உலகில் அருள் சிறந்த தேவர்கள் வாழ்க. பசுக்கள் வாழ்க. குளிர்ந்த நீர் தரும் மழை பருவந்தோறும் பொழிக. நீதியால் அரசாண்டு அரசனும் ஓங்குக. தீயரது தீமைகள் பெருகாது ஆழட்டும் உயிர்கள் தீவினை நீக்கி இரட்சிக்கும் சிவன் நாமம் இம்பூமி எங்கும் சூழ்க. இப்பூமியும் தனக்குறும் துயரம் யாவும் தீரட்டும். 1

அரிய காட்சிய ராய்த்தம தங்கைசேர்
எரியர் ஏறுகந் தேறுவர் கண்டமும்
கரியர் காடுறை வாழ்க்கைய ராயினும்
பெரியர் ஆரறி வார்அவர் பெற்றியே.

இவ்வாறு யாண்டும் யாவும் இன்புற்று மிளிர வைத்திடும் பேரருளாளன் சிவன் அவன் கண்ணுல் காணும் காட்சிக்கு காணெற்கரியவன். என்ருலும் அவனைத்தவத்தால் எட்டிக் கொள்வார்க்கு அவர் தமது திருக்கையில் நெருப்பு ஏந்தியவர். இடபத்தை விரும்பி உகந்து ஏறிச்செல்பவர். கழுத்தும் கருமை உடையவர். சுடுகாட்டில் உறைகின்ற வாழ்க்கை உடையவராகக் காணப்படுவார். அப்படியாக சுடுகாட்டுறையும் வாழ்வுடையார் எனினும் அவர் பெரியவர்! அவர் பெரும் தன்மையை ஆர் அறிவார்? 2

வெந்த சாம்பல் விரையெனப் பூசியே
தந்தை யாரொடு தாயிலர் தம்மையே
சிந்தி யாஎழு வார்வினை தீர்ப்பரால்
எந்தை யாரவர் எவ்வகை யார்கொலோ.

தன்பெருமை தானும் என்றும் காண்கிலாத பெருமை உடைய பகவான் எங்தற்ருர் யாரயலார் என்பார்க்கு வெந்த சாம்பலையே தாம் விரும்பும் வாசனைப்பொடியாகத் திருமேனி பூசுவார். அவர்க்குத் தந்தையுமில்லைத் தாயுமில்லை. எனினும் தன்னையே நினைந்து வாழ்வு கொண்டு எழுவாரின் வினையை அவர் தீர்ப்பார். அவர் எப்படி எவ்வண்ணம் என்று தீர்ப்பார். என அது அறிய முடியாத அப்படியான காரியம். 3

ஆட்பா லவர்க் கருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகில்அளவில்லை கிளக்க வேண்டா
கோட்பா லனவும் வினையுங் குறுகாமை எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின் றிவை கேட்க தக்கார்.

அந்தப் பகவான் தமக்கு ஆட்படுவார்க்கு அருள் புரியும் வண்ணமும் எக்காலத்துத் தொடங்கி நடைபெறுவது என்ற காலவெல்லையும் அதற்கு முன்னுன் ஆதியின் மாண்பும் அதைக்கேட்கப்போனுல் அதற்கு அளவில்லை. இதைப்பற்றி இனி ஆரிடமும் கேட்கும் ஆராச்சிகள் கேள்விகள் கேட்கவேண்டாம். நீங்கள் யாது சந்தேகமும் இன்றி அவன் திருவுருவம் ஒன்று நாட்டி நித்தலும் மலரிட்டு நியமம் செய்து திருவடிவணங்கும் தலைப்பாட்டுடன் நின்று அருள் வழியை தக்காரே கேட்டுக் கொள்ளுங்கள். 4

(ம ப பா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டாம் சுடர்விட்டுளன் எங்கள்சோதி
மாதுக்கம் நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே.

எம்பெருமானைத் இன்ன காரணத்தால் இப்படியானதே என்ற ஏதுவான செயல்களின் முறையாலும் அல்லது இன்ன இடத்தில் இப்படிச் சொல்லப்பட்ட இதன் தன்மை இப்படியாகும் என எடுத்து மொழியும் வார்த்தையாலும் மிகவும் நீர் சோதித்துப் பார்க்க வேண்டாம. தூய்மையுடன் சிந்தித்துப் பாரப்பார்க்கு உள்ள ஒளியாய் சுடர் விட்டு நிற்கின்றான் எங்கள் சோதி சிவன். அதுவே உண்மை. புறவார்த்தையில் அலையாதீர். அகத்தே அமைதியுடன் நாடுங்கள், நாடி நீர் பெற்றுக் கொண்டால் மரணம் என்ற பெரிய துக்கமும் உம்மால் நீங்க முடியும். ஆகவே அங்கிங்கு அலையாது அவனையே மனம் பற்றி வாழ்மின். உலகில் சித்துக்களின் சாதனையால் மேம்பட்டு நிற்கும் சாது நெறியில் மிகுந்துளீரே இதோ எம்பெருமானை எங்கள் உள்ளத்து ஒளியை இறைப்பொழுதாதல் வந்து சேர்ந்து கொள்ளுங்கள். 5

ஆடும் எனவும் அருங்கூற்றம் உதைத்து வேதம்
பாடும் எனவும் புகழல்லது பாவம் நீங்கக்
கேடும் பிறப்பும் அறுக்கும் மெனக்கேட் டீராகில்
நாடுந் திறத்தார்க்கு அருளல்லது நாட்ட லாமே.

இறைவன் திருநடனம் ஆடுவார் எனவும் அரிய இயமனை உதைத்து வேதம் பாடுவாரெனவும் ஏன் செய்தார் எனக்கேட்பீராகில் அது புகழோ அல்லது பாவம் நீங்கவும் கேடுகளும் பிறப்பும் அறுத்திடவோ எனக் கேட்டீராகில் அவையை நாம் சொல்லுகின்றபோது இவற்றை நாடி உணர்வார்க்கு முழுவதும் அவர் அருளே அல்லாது வேறு ஒரு பொருளை நாம் நாட்ட முடியாது என்பதாகும். இறைவனுடைய திருநடனம் முதல் யாவதும் அருள் அன்றி வேறு காரணங்களை நாம் சொல்ல முடியாது. 6

கடிசேர்ந்த போது மலரான கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங் காட்டிடத் தாதைபண்டு
முடிசேர்ந்த காலையற வெட்டிட முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம் அறிவார் சொலக்கேட்டு மன்றே.

இறைவன் திருவடியை வணங்கத் தலைப்பட்ட பிரமச்சாரியான சண்டேச நாயனார் தம் திருக்கரத்து வாசனை கொண்ட நல்ல பூக்களைக் கைக்கொண்டு நல்ல முறையாகப் பெற்ற பசுப்பாலினைக் கொண்டு திருமஞ்சனம் ஆட்டிட அது கண்டு பதைத்தெழுந்து மகனார் தாபித்த பாற்குடங்களை உதைத் துருட்டிய தந்தையது தான் வணங்கிடும் முறையால் முடிசேரும் காலை அறவே வெட்டிட அது கண்டு மூன்று கண்ணுடைய சிவமூர்த்தி அருள் புரிய அப்பெருமான் திருவடி சேர்ந்த வண்ணம் அறிவாளிகள் சொல்லக் கேட்டுக் கொண்டோம். 7

வேத முதல்வன் முதலாக விளங்கி வையம்
ஏதப் படாமை உலகத்தவர் ஏத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை யென்றே கலிக்கோவை சொல்லே.

வேதங்கட்கு ஆதியான சிவன் அவனே முதலாகக் கொண்டு இங்கு வளர்ந்துற்ற இவ்வுலகம் அவனது சிவநெறியில் தவறுதல் ஏற்படாது உலகத்தவர் போற்றுதல் செய்ய; பூதங்களின் முதல்வராய் முழுமுதலாய் பொலிந்த அருள் வரலாற்றின் பதினெண் புராணங்கள் என்று சூதமுனிவன் ஓதி அருளி இறைவனுக்குச் சூட்டிய பாமாலை இதுவே என்று உங்கள் கலியான துன்பத்திற்குத் திறமான மருந்தாகும் அவன் புராணங்களை நீங்கள் சொல்லுங்கள். 8

பாராழி வட்டம் பகையால் நலிந்தாட்ட ஆடிப்
பேராழி யானதிடர் கண்டருள் செய்தல்பேணி
நீராழி விட்டேறி நெஞ்சிடங் கொண்டவர்க்குப்
போராழி ஈந்த புகழும் புகழுற்ற தன்றே.

கடல் சூழ்ந்த வட்ட வடிவான இந்த பூமி உலகம் என்றும் பகை என்னும் துயரத்தால் நலியப் பட்டு அதனால் அசைந்து ஆடப் பெற்று கடல் போல் பெருகிய பெரும் இடர்பாடு கொண்டிடலும் அதனைக்காக்கும் கடவுளான கண்ண பிரானும் கண்டு அப்பகை நீக்கி உலகினைக் காக்கும் பொருட்டாக திருவுளம் கொண்டு தான் துயின்ற பாற்கடலை விட்டு நீங்கி எழுந்து வந்து எம்பிரானை தனது நெஞ்சில் இருத்தி இடங்கொண்டு பூசித்திட அப்பூசை மகிழ்ந்து போரில் வெற்றிதரும் சக்கரப்படை ஒன்று கண்ணபிரானிற்கு கொடுத்து அருள் புரிந்து அதன் மூலமாக உலகினை பகை நீக்கிக் காத்தருளிடவைத்த புகழும் புகழாயதன்றே. 9

மாலா யவனும் மறைவல்ல நான்முகனும்
பாலாய தேவர்பல ரின்அமு தூட்டல் பேணிக்
காலாய முந்நீர் கடைந்தார்க் கரிதா யெழுந்த
ஆலாலம் உண்டங்கம ரர்க்கருள் செய்த தாமே.

திருமாலான அவனும் வேதம் கற்று வல்ல பிரமனும் இருவரு தத்தமது பாலாக நின்ற தேவர் பலர்க்கும் அமுது ஊட்டிட விரும்பியருளி கரைகொண்டு கால்களாகப் பரந்த கடலினை அமுது பெறக் கடைந்து நின்றார்கள். அவ்வேளை அவர் கடல் கடைந்த போது கடலில் நின்றும் நஞ்சு எழுந்தது. அந்த நஞ்சு திருமாலும் பிரமனும் அதைத் தடுத்திட அரிதாம் வகை எழுந்திட அந்த நஞ்சினை உண்டு அங்கு தேவர்க்கு இறவாத வழியாக அருள் செய்து காத்தது சிவனது மேலாம் கருணைத் திறமாகும். 10

அற்றன்றி யந்தண் மதுரைத் தொகை யாக்கினானும்
தெற்றென்று தெய்வந் தெளியார் கரைக்கோலை தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர் வின்ஊரவும் பண்பு நோக்கில்
பெற்றான் றுயர்த்த பெருமான் பெருமானு மன்றே.

இதுவன்றி அழகால் குளிர்ந்த மதுரைத் தொகையான தமிழ் நூல்கள் யானவயும் தலைவனாகி தாமே தமிழ்ச் சங்கத்திலிருந்து ஆக்கியவனுமான பெருமானும் அங்கு அருளாகி இருப்ப: இவன் தான் தெய்வம் என தள்ளத் தெளிந்து தெளியாத சமணர் ஆற்றங்கரையில் ஏடுஇடும் வேளையில் அந்த ஆற்றின் நீரால் அவர்ஓலை அடித்துச் செல்ல இப்தந் திருப்பாசுர ஏடு ஏதும் ஒரு பற்றுக்கோடும் இன்றி நேராக நீரில் எதிர்ந்தோடும் பண்பினை யாது காரணம் என அறிந்தால்: அது தான் இடபக்கொடி உயர்த்திய பெருமானே கடவுள் என்றும் ஞானம் ஈசன் பால் அன்பே எனவும் காட்டி உள்ளது. 11 (ம ப பா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லார்கள் சேர்புகலி ஞானசம்பந்தன் நல்ல
எல்லார் களும்பரவும் ஈசனை யேத்து பாடல்
பல்லார் மதிக்கப் பாசுரம் சொன்ன பத்தும்
வல்லார்கள் வானோ ருலகாளவும் வல்ல ரன்றே.

நல்ல மக்கள் சேரும் சீகாழியில் ஞானசம்பந்தன் நல்ல ஒளி மனத்தால் கரவின்றிப் பிரகாசிக்கும் பெரியோர்கள் போற்றுகின்ற எம்பெருமானைப் போற்றிய இப்பாடலில் பல மக்களும் மதிக்கும் படி திருப்பாசுரமாக முன் சொன்ன பத்துப் பாடலும் ஓதி உணர்ந்திட வல்லார்கள் தேவஉலகை ஆளவும் வல்லமை உடையார் அன்றே. 12

# கலகம் செய்யும் பேச்சாளர் காண்பரிதாய்- ஆனால் ஒளியுடைய உத்தமர்கள் போற்றும் ஈசன் சிவனை ஏத்தும் சம்பந்தருடைய திருப்பாசுரப் பாடலின் விரிந்தகருத்து

திருப்பாசுரம என்று சொல்லப் பெறும் இப்பாடலுக்கு சேக்கிழார் தமது பெரிய புராணத்து 23 பாடல் ஒதி இப்பாசுரத்துள் அடங்கிய கருத்தை விரித்துத் தருகின்றார். செய்யுள் நடையில் இருக்கும் அப்பாடலின் அகலக் கருத்தை நான் கீழே உரையாகத் தருகின்றேன். ஒவ்வொரு திருப்பாசுரவாக்கியங்கட்கும் விரிந்த கருத்தும் அதன் உட்பொருள் விளக்கமும் அமையும்படி இவை இருப்பதைக் காணலாம். எமது சைவ நெறி என்பது இதுதான். இவையன்றி வேறு வீண் பிதற்றல்கள் இல்லை என்பதாக இக்கருத்துகள் அமைகின்றன.

திருப்பாசுரத்து மொத்தம் 11 பாடலாகும். இப்பாடலில் மனிதனுகத் தோன்றி இரண்டு காலும் கையும் படைத்தோர் எய்தக் கூடிய பேற்றை மிகு சுருக்கமாக ஓதி இருக்கின்றார். எல்லார்க்கும் கடவுளான எம்பெருமானது சிறப்பும் அவன் திருவடியடையும் வழியும் சிறப்புற ஓதப்பெற்றுள்ளன.

மனிதன் தெய்வத்தின் அருளை உணரவேண்டுமென்றால் முதற்கண் உலகம் சீராக அமைய வேண்டும். உலகில் சீர் நேர்மை நிதானம் அன்பு இரக்கம் இல்லாது போனால் மக்கள் பெரும் அல்லலிலே சிக்கி பகையால் நோயால் வறுமையால் கொலையால் கொடுமையால் சிக்குண்டு இந்தவித சஞ்சலங்களில் இருந்து மரணத்தறுவாய் வரையும் விடுபடமுடியாதிருப்பார்.

அதற்கிடையில் அவன் தெய்வம் ஒன்று உண்டு அதனை அறிதல் மேல்என்ற எண்ணம் கொள்ள முடியாது. அவர் அப்படிச்செய்தார் இவர் இப்படிச் செய்தார். அங்கே களவு இங்கே கொலை அங்கே கற்பழிப்பு இங்கே கருத்தடை மருந்து கருத்தரங்கு சொற்பொழிவு பாராட்டுஎன்றெல்லாம் ஓடி ஓடி உலைந்து காலையில் எழுந்தால் ஒரு தினசரியைப் பாராமல் இருக்க முடியாதபடி அவ்வளவு தூரம் பழிபாவம் இவற்றின் புதினங்கள் நிறைந்த புதினத்தாளைப் பார்த்திட; ஆவல்கொண்டு சாப்பிட வழியில்லாது போனாலும் ஓர் புதினப் பத்திரிகையை விலைக்கு வாங்கிப் படிக்கின்ற அளவிற்கு உலக நிலை அமைந்து கொண்டது.

ஆகவே உலகில் தீங்கு நெறிகள் அகன்றால் ஒழிய எவர்க்கும் தெய்வநிலை எய்தாது. நமது இல்லம் முதல் தூய்மையாக இருந்தால் தான் வாழ்வு சிறக்கும். வீட்டில் வளவில் கஞ்சலும் குப்பையும் செடியும் பற்றையும் இருக்கும் போது அங்கு சிறப்போ செல்வமோ பெறமுடியாது. அதே போன்று உலகில் தீமைகள் அகல வேண்டும்.

எல்லாவற்றிலும் மிகக் கொடிய பிணி பசிப்பிணி. இதை நீக்க உதவும் உணவுக்கு மூலகாரணம் மழை. அதை மூலமாகக் கொண்டு விளங்கிடும் உலகில் சுபீட்சம் வளர வேண்டுமாகில் மழை சீராகப் பெய்தல் வேண்டும்.

இந்த மழையை உலகில் தரவல்லன யாகங்கள். இந்த யாகங்களைச் செய்பவர் அந்தணர். அந்த அந்தணர்க்கு யாகம் செய்வதற்குப் பால் நெய் தயிர் முதலியன முக்கியம். இந்தப் பொருளைத் தருவன பசுக்கள். அவைகள் தெய்வங்களை அங்கமாக உடையன. அடுத்து இந்த யாகங்களை அந்தணர் செய்தால் அந்த அந்தணர் செய்யும் யாகத்து அவர் ஓதும் மந்திரங்களின் அதிதெய்வங்கள் அந்த அவியை ஏற்று உலகில் சுபீட்சத்தை நன்மையைத் தரவல்லன. பெரும்பாலும் பருவ மழையைத் தருவன. அந்த மழை மூலம் தான் உலகில் விளைவு உண்டாவது. கொடும் வரட்சியால் பீடிக்கப்பட்டு நாம் பட்ட அல்லலும் வேளாண்மை செய்வோர்க்கு விளைந்த நட்டங்களும் உயிர்ச்சேதங்களும் சமீப காலங்களில் நாம் நேரில் கண்டிருக்கின்றோம் அல்லவா? ஆதலின் மழையால் என்றும் வாழ்வு பெறும் உலகில் பருவமழையை ஒழுங்காகப் பெய்திட வழி செய்வன யாகங்கள் என்பது நமது சைவநூற் துணிபு. இது பெரியோர் நீளக்கொண்ட ஒரு உண்மையான கொள்கை.

இன்றைய மக்கள் சமுதாயத்து இதைப் பற்றிப் பேசினால் கேலிக்கிடமாயும் நம்பிக்கைக்குப் பாத்திர மற்றதாகவும் இருக்கலாம். ஏனெனில் இன்று எந்த ஒரு சைவர்க்கோ அந்தணர்க்கோ இந்த உண்மைகள் புலனாகாது என்பது உண்மை.

இன்று சைவ மக்களுக்கு வேண்டியது கோவிலில் ஒரு பிரசங்கம் அடுத்து ஒரு கச்சேரி அடுத்துக் கொஞ்சம் நித்திரை தூங்குகிற நேரம் வில்லுப்பாட்டு அடுத்து விடிய ப்புறம் பறந்து போனாளே அவள் மறந்து போனாளே என்று பத்துத் தரம் அழுத்திப் பாடிடக் கேட்டிட்டு அச்சாத் திருவிழா அடுத்த வருடமும் இதுதான். தாலிக்கொடி அடைவு வைத்தும் இதைத் தான் செய்வோம் என எம் சைவ உலகம் வந்து விட்டது. இதை வரும்படி பெருக்கி வீடு வாசல் வடிவாய்க் கட்டும் பிரசங்கியனும் விடா

தை பிடி உது தான் சரி என்று இரகசியமாக அலுவல் நடத்துகின்றார். இந்த வகை எமது சைவநெறி கோபுரம் தாண்டு குப்பை மிதந்தது என்ற ஒரு பழமொழி போல் ஆகிவிட்டது. அதை நாம் சொல்லப் போனால் சந்தியில் வைத்துக் கடமை செய்யப் போவதாகக் கடிதமும் வருகின்றது.

உண்மையாம் படி வேதநெறிக்குரிய செயலான யாகாதி கருமங்கள் கைவிடப்பட்டு பட்டமும் பதவியும் பாராட்டு மூலமே சைவம் வளர்க்கின்றார்கள். இந்நிலையில் நாம் இந்த நெறிகளைச் சொல்லி வைக்க வேண்டிய நிலை வந்துள்ளது.

அசுரத் தன்மையால் ஈடேற்றம் கண்டு கொண்ட சில அந்தணர்கள் ஒரு சில ஆசிரியர்கள் சைவர்கள் தங்கள் கரவு உள்ளத்தால் நம்முடைய பணிக்கு மிகவும் வேதனையான செயலை உருவாக்குகின்றனர். நமக்கு அதைப் பற்றி ஒன்றுமில்லை "தோன்றாத் துணையாய் இருந்தனன் தம்மடியோங்கட்கு" என்ற திருநாவுக்கரசர் பிரானுடைய திருவாக்கே தஞ்சம்.

அடுத்து அந்தணர்கள் பசுக்கள் தேவர்கள் இவர்களை வாழ்த்திய பின் அரசனும் நீதியால் ஓங்குக என்று அரசன் நன்நெறிப்பட்டு உலகை நடத்தலின் அவசியம் வலியுறுத்துகின்றார். பின்னர் தீய செயல் யாவையுமான கொலை களவு வஞ்சனையாய அவற்றைப் பெருக்கும் அசுர உள்ளமுடைய பாதகரின் செயல் ஆழ்ந்து ஒழிந்து போகட்டும் என்கின்றார். சிவன் நாமமே சூழட்டும் எங்கும் என்கின்றார். இதை எல்லா உயிரும் ஐந்து எழுத்தை முறைப்பட ஓதி (ஒலிபெருக்கி மூலம் அன்று) நல்வாழ்வும் நற்சிந்தையும் கொண்டு தெய்வசித்தமுடையவராய் விளங்கி இவ்வுலகிலும் உடல் நீங்கிய அவ்வுலகிலும் நல் நிலை அடையுமாறு போற்றுகின்றார் ஞானசம்பந்தர், இனி சேக்கிழார் தரும் அகலக் கருத்தைக் கீழே தருகின்றேன்.

இவ்வாறாக வேதநெறிவழியே உலகம். அதன் மெய்நெறி சிவநெறியாய சைவமே என்று எம்பிரான் சிவன் அருளை பெருமைபெறயாரும் உணர்ந்தறிய அருள் செய்ததே திருப்பாசுரம். இது சிவன் என்னும் பொருளை அடையத் திருவுடை யார்க்கு உற்ற வழியின் தத்துவங்கள் சுருங்கிய வரலாறாக திருப்பாசுரமாக சுவாமிகளால் அருளப்பெற்றது உலகில் இரண்டு கையுடைய காலுடைய எந்த ஒரு மனிதனும் உண்மைப் பொருளான கடவுட் காட்சியைப் பெற்று உய்ந்திடற்கு அறிந்திடும் கலை ஞானங்கள் யாவும் கொள்ளப்பெற்றது. உலகில் வாழ்க்கை எப்படி அமைந்தால் இன்பமாகும் என்றும் அதற்குரிய மூல ஒழுக்கங்களும் எம்பிரான் சிவன் பேரருட் திறங்களும் போற்றப்பெறுவன. இதில் 12 திருப்பாடல் உண்டு, அதன் உரைநடையை கிழே கண்டு கொள்ளுங்கள்.

"அந்தணர்கள் தேவர்கள் பசுவினங்கள் வாழட்டும்" இதுவே முதலாய திருப்பாசுர மொழி என சொல்லியவாறுயாதாகவோ என்றால் இந்த மொழியின் பயனால் உலகம் இன்புறற் பொருட்டும்; அதுவன்றி இனிய யாகங்கள் முதல் எம்பெருமான் சிவனுக்கென ஆகமங்கள் விதித்துள்ள அர்ச்சனை வழிபாடுகள் சிறந்து ஓங்கிடற் பொருட்டாகும்;

உலகம் இன்புறல் வேண்டில் சிவவழிபாடு ஓங்கவேண்டும். இது உண்மையாவது. இதனை வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் என்பதற்கு பொருள் சொன்னவாறு எனக்கண்டு கொள்க.

அடுத்து "வீழ்க தண்புனல்" என்றது யகாம் செய்தலின் நற்பயன் பெய்திடும் பருவமழையாவது: எம்பிராற்கு நாளும் செய்திடும் அர்ச்சனை மேலான நல்ல செயல் ஆதலால் அதனை முட்டின்றி நடைபெறுதற்கு உலகை நன்நெறியில் ஒழுகச் செய்திட ஓர் அரசன் தேவையால் "வேந்தனும் ஓங்குக" என்று உலகை ஆளும் அரசனை வாழ்த்தினர் மற்று எம்பிராற்கு பொருந்திய அர்ச்சனையை காத்திட மக்களை நன்நெறிப் படுத்திடும் முறைமையால் என்க.

சிவார்ச்சனையின் மேன்மை குறித்து அதைப்பேணிக்காத்திட ஓர் அரசன் வேண்டும் என்பதால் அவனை "வேந்தனும் ஓங்குக" என்றது; சிந்தையை உயர்வாகக் கொண்டு சிவனருட் பெருமையை ஆளும் அவனும் உணரும் பொருட்டாக என்க. உலகில் புண்ணியம் செய்வாரைப் பேணுவதும் பாவம் புரிவாரைத் தண்டிப்பதும் அரசனுடைய கடமையும் பொறுப்புமாகும்.

அப்பால் ஆழ்கதீயது எல்லாம் என்று முதற்பாசுரத்து ஒதியது ஏனெனில் உலகில் உண்மையான சிவநெறிக்குப் புறம்பான புறமாய மற்றச் பாதகங்கள் எல்லாம் வீழ்க என மொழிந்தவாறாகும். இன்னும் அப்பாட்டில் அரன் நாமமே சூழ்க என்றது தொன்மையான உயிர் யாவையும் வாழ்வுதரும் ஐந்தெழுத்தையும் ஓதி வளர்ந்திடற் பொருட்டாம் கருணையை எடுத்து மொழிந்தவாறாகும்;

இஃது அரன் நாமம் எவ்வாறு உயிர்களை நன்நெறிப் படுத்தி தீங்கின்றி வளர வைத்திடும் என்பதன் தன்மையை வெளிப்படுத்தியவாறாகும்;

இன்னமும் சொன்ன வையகமும் துயர்தீர்க்கவே என்றதன் தன்மையாதெனின் இந்த உலகிலும் மனிதர்கள் எடுத்த உலல் நீக்கிப் போய் அந்த உலகிலும் துயருடன் பொருந்தி வாழும் உலகத்தவரின் துயர்போக்கிட [illegible]சியாக முன்னர் ஞானசம்பந்தர் மொழிந்தனர்;

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் பசுக்கள் யாகத்திற்கு பாலும் அர்ச்சனைக்கு பஞ்சகௌவியமும் தருதலாலும் அந்தணர்கள் அதுகொண்டு யாகம் செய்தலால் தேவர்கள் அவி ஏற்று மழைபொழியவைத்தாலும் மழையால் உலகில் உணவு பெருகி மக்கள் இன்புற்று வாழலாலும் அவ்வாழ்க்கையில் சிவார்ச்சனை மேம்பட்டதாயும் அதனைக் காத்திட அரசனையும் வாழ்த்தி மக்களை தீயவழியில் ஒழுகச்செய்யும் துன்நெறிகளையும் ஆழ்க என்று மொழிந்து உயிர்கள் அரன்நாமமும் ஓதி துயர் தீரும்பொருட்டு வாழ்த்தியதே முதற் பாசுரமாகும்.

அடுத்த திருப்பாட்டில் அரிய காட்சியராய் என்றது அந்த ஆதியாய சிவனை தெரியத்தகும் பொருளாய கண் முதல் வேறுபுலன்களால் யாவருக்குமே தெரியப் படார் என்பதாகும். ஆனால் அவரை அறிகின்றதற் குற்ற அன்பினால் காண்பார்கள் காணக்கூடிய தன்மையாக அவர்பால் பொருந்திய நல்ல அடையாளங்கள் பேசினர். திருஞானசம்பந்தர். அவையாவன அங்கையில் சேர்ந்த அனல் உடையர். ஏறு உகந்து ஏறுவர். கண்டமும் கரியர். காட்டில் உறையும் வாழ்க்கை உடையர் என் பவையாகும்.

இப்படியாக வடிவுடையராக அவர் இருந்தாலும் அவர் பெரியவராகுவார் என மொழிந்தது எவ்வாறோ எனின் பொருந்திய இந்த இயல்பான வடிவங்களே அல்லாமல் வானம் முதல் காற்று நெருப்பு ஆப இந்த பூதங்கள் பல உயிர்கள் அண்டங்கள் எவையும் யாவும் இவர் வடிவேயாகும் என்பதாம்.

அங்கையில் அனலேந்தி கண்டமும் கருமையாகி சுடுகாட்டில் உறையும் வாழ்க்கையராகி இடபமேறும் ஒருவராக கணித்திடப் பெற்றாலும் எல்லாப் பொருளும் தாமேயாய் நிற்கின்றமையின் பெரியார் என்கின்றார் என்க.

பின்பும் ஆர்அறியார் அவர் பெற்றிமை (சிறப்பு) என்றது; அவரை யார் ஒருவரது உணர்வாலும் சென்று எட்டொணாதவகை நின்ற மேலாய பெரும் தன்மையான் எம் இறை என எம்பெருமானை வாழ்த்தினர் அத்திருப்பாடலில் ஈசன்பால் அன்பு சூழும் சீகாழிப்பதி ஆண்டகையார் திருஞானசம்பந்தர்.

அடுத்த திருப்பாட்டில் வெந்த சாம்பல்விரை எனச் சொல்லியது எதனாலெனின் எம் பெருமான் தமது முடிவிலாத ஒளி அல்லாத ஏனைய ஒளியெலாம் வந்து வெந்து அவரில்பட்டுப் பொடியாயிட மற்று அந்தப் பொடியினை திருமேனி மீது அணியும் சாந்தாகக் கொண்டவண்ணத்தை சொல்லியருளினர். இதனால் அறியப்படாத அந்த ஒளியில் புறத்து அக்கினியான ஒளியும் எரிக்கப்பட்டு நீறாகிட அந்த நீறேதமக்கு சாம்பராக வாசனைப் பூச்சாக அணிகின்றான். எம்பெருமான் என்றவாறு.

அப்பால் தமக்கு தந்தை தாய்இலர் என்று என்ன காரணமாக மொழிந்ததோ என்றால் எல்லாவற்றையும் தாமே படைத்து பின்னர் அவை இறந்து ஒழியும்போது என்றும் பிரகாசமாய சோதியாய தன்னுள் அவற்றை அடக்கிய பின்னர் அவற்றை மீளவும் படைத்திடலால் தானே தமக்கு தாயும் தந்தையுமாயவர். எனவே தான்தோற்றும் மூலப்பொருள் இலாமையின் எமக்கு நாதர் சிவன் பிறப்பிலர் என்பதாம்.

அடுத்து தம்மையே சித்தியா எழுவார் வினை தீர்ப்பரால் என்ற தன்மை தான் யாதெனில் மெய்மையாக என்றும் விளங்கும் ஒளிதாமே என்றே இப்பிறப்பில் தம்மை நினைவாரின் கொடிய இருவினையால் வரும் பொய்மாய வல்இருளை போக்குவர் அவர் என்றவாறு.

''எந்தையார் அவர் எவ்வகையார் கொலோ'' என்று என் சொல்லியவாறெனில் இந்த ஒரு உண்மையான வார்த்தை; மற்று எந்த ஒரு பொருளை எடுத்து மொழியும் வாக்கிலும் முதற்பொருளாக இருப்பாரை எந்த வாக்கால் எடுத்து மொழியலாம் என்று அழகிய சீகாழிஅரசர் சம்பந்தர் அப்பாசுரத்து பாடியருளினர்.

கூறப்படும் கூற்றிற்கு முதலாயவரை எந்தக்கூற்றால் சொல்வது. இது அறிகின்ற அவனை எவ்வாறு அறிவது என்பதுபோல. காணொணாதது பேசொணாதது ஆனால் பேசச்செய்வது அது. பேசச்செய்யும் அதை எப்பேச்சால் பேசமுடியும்? ஆதலாலே எந்தையார் அவர் எவ்வகையார் என அறியப்படார் என்றார்.

அடுத்த திருப்பாட்டு ''ஆதி ஆட்பாலவர்க்கு அருளும் திறனும் மாண்பும்'' என்பதில் எம் நாதனின் அன்பர்க்கருளும் மாட்சிமையை நீர்கேட்க நாம் சொல்லும் கால் அதுசொல்வதற்கு ஓர் எல்லையில்லை அது அளவிறந்தது. அந்த அருளிப் பாட்டின் புதுமை பற்றியாதும் ஓர் ஆராய்ச்சி வேண்டியதில்லை என்பதாம்.

அன்றும் இன்றும் என்றும் அவனது ஆடலால் ஆட்படுவோர்க்கு ஆதியாய் சிவனே அருள்கின்றான். அதைப்பற்றி எந்த ஆண்டு எப்போது நிகழ்ந்தது மறுபடியும் நிகழுமோ என்றெல்லாம் நீர் ஆராய்ந்து சங்கடப் படல் வேண்டாம் என்றவாறு.

அவ்வாறு எம் நாதன் அருளிடும் நிலைமை அது ஆதலின் ஆதியாய அப்பன் திருவடிகளை நீர் தஞ்சமென அடைந்து இன்ன வண்ணம் வேண்டியவாறு கேட்டிடவே உம்மை யடைந்து கொண்ட பிறவியின் அல்லலும் முன்னையாய வல்வினையும் முடிவெய்தும் அவ்வாறு திருவடி தஞ்சமாக நிற்போர்க்கு என்றனர் சீகாழி நகர்க்காவலர் திருஞானசம்பந்தர்.

சீர் பொருந்திய ''ஏதுக்களால்'' என்னும் திருப்பாட்டின் உண்மைப் பொருள் தான் யாதெனின் தனக்கு ஒப்பாக வேறு ஒன்றும் இன்மையால் எம்நாதன் சிவன் இன்னவாறாய தன்மையை ஓர் எடுத்துக் காட்டு மேற்கோள் ஆகிய இலக்கண ஆற்றினால் காண்பித்திட அது அளந்திட அரிதாவது என்பதாகும்.

எம்பிரான் சிவனிற்கு ஒப்பு வேறின்மையின் என்றமையால் அரியும் சிவனும் ஒன்று; இன்னமும் வேறு வேறு கடவுளர் எல்லாம் ஒன்று என்று சொல்லி சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு மொழிதல் எவ்வளவு பாதகமாகும்.

ஒரு உண்மையைக் கண்டு தெளிந்த பின்புதான் உலகிற்குப் போதிக்க வேண்டும். அல்லாது கண்டபடி பேசுவோர்க்கும் எவ்வளவு பழி பின்பற்றுவோருக்கும் எவ்வளவு துயர்சேரும் என்பதை நீங்கள் இம்மொழியால் உணர்ந்து பாருங்கள்.

அடுத்து அப்பன் தோன்றும் காட்சியில் ''சுடர் விட்டுளன்'' என்றது; பொருந்திய நெருப்பும் அவன் திருவடியின் புறத்து ஒளியாயது. அது சுடர் என்றமையால் அது போன்றதல்ல; ஆனால் அன்பினால் ஊன்றி உள்க உள்க மெள்ள உள்ளெழும் சோதியாய் நின்றனன் என் அப்பன் சிவன் என்பதால் அதனை விரும்பித் தாகமுடன் காண்பார்க்கு இது பொருள் என்றதாகும்.

ஒரு பொல்லாப்புமில்லை அமைதியுடன் எம் அப்பனை தனித்திருந்து சிந்தித்து தியானித்துப் பாரும். அவ்வொளி நாடும் உங்கள் யாவர்க்கும் தோற்றப் படும் என உறுதிமொழிந்தவாறாகும்;

''மாதுக்கம் நீங்கலுறுவீர் மனம் பற்றும்'' என அவர் மொழிந்தது எவ்வாறோ எனின் ஆதியாய சுடர்ச்சோதியை சிவனை அன்பினால் அகத்துள்ளடக்கி அவர்பால் ஞானவழியாய நோக்கம் ஒழியாது பொருந்தி வாழ்ந்து உம்மைப் பேதித்திட வைத்திடும் பந்தத்தின் பிறப்பின் வழியை நீக்கிக் கொள்ளுங்கள் என்றதாகும்.

மாதுக்கம் என்பது மரணத்தைக் குறித்தது. ஆசையும் வீணானசிந்தையுமே மரணத்திற்கு ஏதுவாயது. ஆதலால் அந்த சங்கடத்தின் நின்றும் நீர் தலை எடுக்க வேண்டும் என்றால் ஆதியாய சுடரை சிவனை அன்பினால் உள்ளத்திருத்தி சீலம் மிகுந்த வாழ்க்கையின் ஞான நோக்கினால் நோக்கிட அது தென்படும் என உறுதி மொழிந்தவாறு. ''சும்மா இரு சொல்லற'' என்றதும் இதுவேயாம்.

அடுத்து ''ஈண்டு சாதுக்கள் மிக்கீர் என்று ஓதியது யாதோஎனின் சாதுக்களாய் விளங்கியபோது சித்துக்களால் மிகுந்தவுடன் அது அவர்களை அதற்குற்ற அறநெறியில் நின்றும் இறக்கி தங்களையே பெரிதும் மதித்திட வைக்கும். ஆதலின் அது உண்மையை உணர்த்தற்கு மறைப்பாதலாலும் ''சாதுக்கள் மிக்கீர்'' என்று எடுத்து ஓதி அவர்கள் யாவரையும் நீங்கள்'' இறையே வந்து சார்ந்து'' நீர் வேண்டும் விருப்பம் எல்லாம் ஈசன் சிவன் திருவடிகளை பூண்ட அன்பினால் போற்றுவீராக என்று எம்மை ஆண்ட சீகாழி அரசர் திருஞானசம்பந்தர் அருள் செய்தார் என்க.

''ஆடும் எனவும்,, எனும் திருப்பாட்டினில் அமைந்த: ஆடும் எனவும்: அரும் கூற்றம் உதைத்து; வேதம் பாடும் எனவும் மொழிந்த மூன்றும் நீடித்த புகழாகவோ அல்லது தன்னை அடைந்த பிறர் துயரம் தீர்த்திடற்கோ என ஆராய்ந்து தேடிடும் உணர்வுடையீர் இவைகளை எம்பெருமான் செய்தது எதற்காக எனின் ஈசனிடத்து இயல்பில் கூடியகருணைத் திறமாகும் என்றனர் கொள்கையால் மேலாய திருஞானசம்பந்தர்.

ஆடுவதும் கூற்றம் உதைத்து வேதம் பாடுவதும் அருளாவது. உயிர் மேலாக வைத்த கருணையின் செயல் என்றார். அதுவன்றி ஈசன் தனக்குற்ற புகழுக்காகவல்ல. இஃது உயிர்களைப்பற்றிய பாவம்(மரணம்) நீங்கிடவும் கேடுதரும் பிறவியும் அறுத்திடுவதற்குமோ என்று நீர் கேட்டால் அதனை நன்கு நாடினார்க்கு அப்படியாய அருளாவது என்றார் அந்தப் பாசுர பாடலில் என்க. ஈசன் தன்பெருமையறியாத தத்துவன். அவன் செயல் யாவும் அருளின் வசமாவது: இதனை உணர்வர் உய்வர் என்றபடி.

அடுத்து கருதிடும் ''கடிசேர்ந்தபோது மலரான'' எனும் திருப்பாட்டில் ஈசன் பால் விரும்பி செய்திடும் பெரும் பூசை அதனை மறுத்து தடுப்பாரை கொல்வதே முத்தி தரும் தன்மையாவது. இந்த உண்மையை சண்டேசநாயனாருடைய பெரும் செய்கையாக தக்கோர் பெரிதும் சொல்லக் கேட்டனம் என்று கூறியருளினர் எம் திருஞான சம்பந்தப் பெருமான்.

வாசனை உடைய பூக்கள் முதலான கைக்கொண்டு நல்லபடி வாய்ந்த பால் கொண்டு எம் அப்பனை சிவனை திருமஞ்சனம் ஆட்டிட அது தவறு என தந்தை எச்சதத்தன் கண்டு காலால் இடறிச் சிந்திட அந்தக் காலை அறவே வெட்டிட அதனால் முக்கண்மூர்த்தி சிவன் திருவடியினை அந்த உடம்பு தன்னுடனே சண்டேசர் அடைந்தார் என்றது உண்மை அறிந்தார் சொல்லக்கேட்டனம் என்ற பாசுரக் கருத்து சிவார்சனை புரிவாரைத் தடுப்பாரை கொல்லல் முத்திதரும் என்னும் உண்மையாயது. அதில் பாதகம் இல்லை என்பது பகர்ந்தவாறு என்க.

'வேதமுதல்வர்' எனத்தொடங்கிய அத்திருபாசுரப் பாடலில் ஆதியாய சிவம் உலகோர் தமது இடர் நீங்கி ஏத்திட ஆடுகின்ற பாதமே முதலாகக் கொண்டு விளங்கியது பதினென் புராணங்கள் என்று உணர்ந்து அதனை நீங்கள் ஓதுங்கள் என்று உரைசெய்தார் யாவையும் ஓதாது உணர்ந்த திருஞானசம்பந்தப் பெருமான்.

வேதத்தின் முதல்வன் சிவன். அவனது ஞான வடிவாய உடலத்தினின்றும் தோற்றிய உலகில் வாழும் எல்லார்க்கும் அவர்கள் ஏதப்படாமல் வாழ்ந்திட அவன் திருப்பாதமாக விளங்குவது பதினென் புராணம். அதனை கலிநீங்க ஓதிடுங்கள் என்கின்றார். அவற்றை பாசுரத்து ''சூதன் ஒலிமாலை கலிக்கோவை சொல்லே'' என்றவாறு காண்க: சூதமுனிவரே மக்கள் கலியின் துயரம் நீங்கி நன்நெறிப்பட உலகறிய ஓதியது அப்புராணங்கள் ஆனமையின் சூதன் ஒலிமாலை என்றது காண்க.

பாடலாக மலர்ந்த ''பாராழி வட்டம்'' என வரும் திருப்பாட்டின் உண்மையாவது உலகைக் காத்திடும் தொழில் உடையவன் என்னும் கண்ண பிரானும் (திருமாலும்) தனது காவல் தொழிலை செவ்வனே புரிந்திடற்கு காவல் பெற்றது எல்லார்க்கும் மேலாய ஈசன் அருளாய சக்கரப்படை பெற்றுக் கொண்ட வகையால் ஆகும். அருளால் கொடுபட்ட சக்கரப்படையால் தனது காவல் செயலைப்புரிந்திட சீருற்றார் என்று மொழிந்தார் வேதவாய் உடைய சம்பந்த சுவாமிகள்;

விஷ்ணுவை உலகத்தவர் பரமெனக் கொண்டு வழிபட்டு மேலாய பேறு அடைவதும் அவர் பகையால் உலகம் ஆழ்ந்து இடர்படும் போது அந்தஇடர்நீக்கி காத்தருள் புரிவதும் எவர்க்கும் மேலாய ஈசன் கொடுத்த சக்கரப்படையின் ஆற்றலேயாகும்; அப்படை இலாமல் நாராயணனுக்கும் பெருமை இல்லை. இதனை உணர்மின் என்றனர் திருஞானசம்பந்தர்.

அப்பால் ''மாலாயவன்'' என்ன வருகின்ற அத்திருப்பாட்டில் திருமாலும்; குறைவிலாத வகை நிறைந்த வேதத்தவனாகி நான்கு முகமுடைய பிரமனும்; சேரத்தொடங்கிய பாற்கடல் கடையும் அவ்வேளை அங்கு நின்றதேவர் நிற்கமுடியாமல் ஓடிடும்படி எழுந்து சுட்ட நஞ்சினை தாமே உண்டு அவர்களை இறவாது காத்து நின்ற எம் நாயகன் சிவனுடைய மேலாய கருணைத் திறத்தை அப்பாடலில் சீகாழி அரசர் திருஞானசம்

(மபபா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தர் வைத்தருளினுர்: சிவன் கருணையே உருவானவன்; வஞ்சனை அற்ற பரந்த கொள்கை உடையவன் என்பது பொருளாகும்; நம் செயலால் வரும் தீங்குகளைத்தீர்க்கும் கருணை உடையவன் அவன் என்றவாறு;

ஆகிய''அற்றன்றி'' என்ற திருப்பாட்டில் மதுரமாநகரத்து தமிழ்ச்சங்கம் வைத்த தலையாய தேவன் சிவன் தானங்கிருந்து தேற்றவும் தேறிக் கொள்ளாத சமணர்கள் வீண்பொழுது போக்குவார் அவர் கொள்கையின் முடிவுக்கு இட்ட எமது இந்த ஏடு ஓடும் ஆற்றுநீரை எதிர்த்து செல்லில் உலகில் உள்ள எவர்க்கும் தேறிக் கொள்வதான உண்மை ஞானம் என்பது; ''ஈசன் சிவன் பால் அன்பே ஆகும்'' என்றனர் ஞான அமுது உண்டருளிய திருஞானசம்பந்தப்பெருமான்;

ஞானம் என்பது அறிவைக் குறித்தது, ஞானிகளாலும்சரி, யோகிகளாயினும்சரி, சுவாமிகளாயினும்சரி, தேவர்களாயினும்சரி யார்க்கும் அறிவெனப்படுவது தெளிவுற்றதாயின் அது ஈசன் சிவன்பால் அன்பு என்பது இப்பாடலின் கருத்தாகும்; அன்பின்பாற் பட்டதே சிவம் அன்பிலாரிடத்து அஃது இல்லை; பேயர் போல் இருந்தாலும் அன்புடையார் பால் சிவன் இருப்பன்; அன்றி கல்வி மேம்பாட்டினுலே செல்வச் செருக்கினுலோ அதிகாரச் சிறப்பினுலோ அவனை அறியமுடியாது என்பது ஈண்டுசொல்லிய உண்மைப்பொருளாகும்;

# சிவத்தியானம் செய்து பழகுவோம் எம் சிறுவரையும் அவ்வாறு பழக்குவோம்

**சரணகமல ஆலயத்தை அரை நிமிட நேர மட்டில் தவமுறை தியானம் வைக்க அறியாத சகட சட மூட மட்டி** என சும்மா இருந்து தியானம் செய்ய முடியாத நிலை பற்றி தன்னை நொந்து கொள்கின்ருா தந்தை அருணகிரியார்.

இதைத் தான் திருஞான சம்பந்தப் பெருமானும் **மாதுக்கம் நீங்கலுறுவீர் மனம் பற்றும்** என்கின்ருர். இதற்கு சேக்சிழார் **அன்பின் உன்றி நினைக்க உள்ளெழும் சோதியாய் உளன் எம் இறை** எனப் பொருள் கொள்கின்றர். இதனல் சிவத்தியானம் எவ்வளவு மேன்மை உடையது எனத் தெளியலாம்.

இரண்டு நாட்களுக்கு முன் கொழும்புத்துறை வீதியால் வந்து கொண்டு இருந்தேன். யோக சுவாமிகள் ஆச்சிரமம் முன்பு வரநேர்ந்தது. அப்பொழுது ஆச்சிரமம் முன்பு பல பல ஆண்டுகள் சுவாமிகட்கு திருவடித் தொண்டு செய்யும் பேறுடையவரும் ஈகை அன்பு கண்ணியம் என்னும் பண்பிற்கு உலகமட்கட்கோர் எடுத்துக் காட்டாக உள்ள திருநாவுக்கரசுவைக் காண நேர்ந்தது. அப்போது அவர் என்னை நோக்கி இந்த ஒரு வாக்கியத்தைச் சொன்னுர்.

**இங்கு பாரும் யோக சுவாமிகட்கு எல்லாரும் சிவத்தியானம் செய்து பழகிக் கொள்ள வேண்டும் என்பது நெடுக உள்ள விருப்பமாக உள்ளது. பிள்ளைகள் கெட்டுப் போகாது அந்தப் பிள்ளைகட்கும் சிறுவயசில் இருந்தே சிவத்தியானம் செய்யப் பழக்கவேண்டும் என சுவாமிகள் அடிக்கடி சொல்பவர் ஆகவே அதைப் பற்றி உமது பத்திரிகையில் எழுதும்** என்ருர். அதனை நான் திருவருட் செயலாகவே ஏற்க வேண்டி வந்துள்ளது.

ஏன் என்ருல் இம்முறை முதற்பக்கத்தில் திருஞானசம்பந்த சுவாமிகளின் திருபாசுரம் தந்து பத்திரிகை வெளியிட ஆயத்தமாகி முதல் 4 பக்கம் அச்சடித்த பின்னர் அடுத்த 4 பக்கம் ஆயத்தம் செய்திடும் நேரம் இவர் இதையும் மொழிந்தார். நான் நினைந்தேன் எனது பணிதெய்வத் தொடர்புடையது. என் செயலால் ஆவது இல்லை. இதோ முற்பக்கத்தில் உள்ள திருப்பாசுரப்பாடலில் மாதுக்கம் நீங்லுறுவீர் மனம் பற்றி வாழ்மின் என திருஞானசம்பந்தப் பெருமான் கூறுகின்ருர். அதற்கு சேக்கிழார் பொருள் தரும் பொழுது அன்பினல் நித்திலும் ஊன்றித்தியானியுங்கள். உள்ளத்து எழும் சோதியாய் தோன்றுவான் சிவன் என்றதே திருஞானசம்பந்தரின் கருத்து என்றும் அது அவர் திருப்பாதம் தந்தது என்றும் போற்றுக் கொண்டு சொல்கின்றேன் என்கின்ருர். இதை இன்று எம்மக்களில் எத்தனைபேர் விளங்கிக்கொள்வார். திருஞானசம்பந்தப் பெருமான் அந்தவார்த்தையோடு மட்டும் நின்றிடவில்லை. மேலும் சொல்லுகின்ருர். சாதுக்கள் மீக்கிர் இறையே வந்து சார்மின்கள் என்கின்ருர். அதாவது சித்திஞல் பட்டத்தால் பெருமையால் விலாசத்தால் பெரும் சுவாமிகள் என உம்மை அறிவிலாதமக்கள் உயர்த்திச் சொல்லிட அதனல் இறுமாந்து நாம் சாது என்றும் மேலான குருக்கள் என்றும் மிகுந்த மேம்பாட்டுடன் இருப்போரே நீங்களும் சிவத்தியான மூலம் தான் ஈடேறலாம். பேச்சால் வசீகரத்தால் கோலத்தால் வேடத்தால் பாட்டால் தாளத்தால் பிரசங்கத்தால் நீங்கள் உய்தி காணமாட்டீர். உமது பெரிய எண்ணத்தை விடுத்து கீழ்நோக்கி இறங்கிவாரும் சிவனைச் சேர்ந்து கொள்ளுங்கள் என எவ்வளவு நயமுடன் சொல்லியிருக்கின்ருர்.

இந்த ஒரு நிலையைத்தான் யோக சுவாமிகளும் வலியுறுத்திச் சொன்னதாக நாம் கொள்ளவேண்டும். மனிதனுடைய இயல்பு கொஞ்சம் தனக்கு மதிப்பு வருகின்றது என்ருல் ஐயோ போச்சு. உடனே அவர் வானில் எழுந்திடுவார். ஐயோ அவர்தான் வானில் எழபஞ்சிப்பட்டாலும் பாராட்டிப் பட்டம் கொடுத்து அவரை உயர்த்தி வைக்கும் விழாஎடுப்போர் விடார். பஞ்சிப்பட்டு படுத்திருந்தாலும் விழா எடுக்கும் வீரர்கள் சேவகர்கள் சீடர்கள் கடைசி ஒரு தேத்தண்ணி விசுக்கோத்துகள் விருந்து அல்லது சிற்றூண்டிகள் வடை அல்லது திறமான சாப்பாடு இவற்றிற்காக வாகுதல் குருக்களையோ அல்லது சுவாமியையோ அல்லது பண்டிதை பண்டிதரையோ விடார். கோவிலில் காவி என்ருகுதல் விழா மிகு திறமாக நடக்தும். கொடி இறக்கினல் குருக்களே விழாஎடுக்காட்டில் கோபிப்பார். எமது அயலில் உள்ள பிள்ளையார் கோவில் ஒன்றில் திருவிழாக்காலத்தில் உச்சப்பிடியான திருவிழா கொடி இறக்கமும் குருக்களுக்கு விழா ஏற்றமும். இந்த வகை விழா எடுப்பதை பெரியோர் தவறு என்றே சொல்லாமல் விடவே இல்லை.

கொழும்புத்துறை யோக சுவாமிகள் நல்லூர் மேல் பாடிய திருப்பாடல் ஒன்றில் நல்லூர் செல்வதையும் வடிவேல் பெருமையும் பூசையும சொல்லி திரும்பி வருகின்றபோது மெதுவாக தன்னுடைய மனதை கிளியாகப் பாவித்து இத்தகைய சந்தியில் கூடிநின்று வீண்கதை பேசும் மனிதரையும் விழா எடுப்பாரையும் எல்லாரையும் நோகாமல்; **விரைவாக நடந்து வாடி கிளியே வீணர்தம் கூட்டமடி** என்று வீண்செயலில் ஈடுபட்டு தம் பொழுதை அவமே கழிப்பாரைச் சொல்லியே இருக்கின்ருர். ஆனல் விழா எடுப்பார் தம் செயல் பெரிது என்றே சொல்வார். அதற்கு நாம் என் செய்யலாம் இன்று சைவம் விழா மூலமே வளர்க்கின்ரேம் என்றும்; இன்னுமொரு மாகவித்தியாலய அதிபர் நாடக மூலம் தான் சைவம் வளர்க்கலாம் என்றும் அப்புண்ணியவான்கள் என்னிடம் நேரில் சொன்ன கதைகள் உண்டு.

இப்படியான தொரு மக்கள் சமுதாய அமைப்பிலே சிவத்தியானம் என்பதைப் பற்றி நான் எழுதுவது எப்படி? அது மிக மிக கடினமான தொன்று. யார் அதைக் கேட்பார்?

சிவத்தியானமும் மேடை மேல் இருந்து நாலு பேர் பார்க்கக் கூடியதாகச் செயல் பட்டு அதன் திறமைக்கு ஒரு பொன்னுடை அல்லது சிவத்தியான மணி மன்னன் பூஷணம் என்று பட்டம் கொடுப்பதாக இருந்தால் ஒரு கால மக்கள் ஓம்படுவர். இல்லாட்டில் சிவத்தியானத்து கண் இரண்டையும் இறுக்கி மூடிக் கொண்டு காலையும் சப்பாணி கொட்டி கையையும் சுண்டிப் பிடித்து கமராவுக்குப் போஸ் கொடுத்தால் எமது பத்திரிகைகளில் முதற் பக்கத்தில் பிரசுரித்தால் வானெலி மூலம் மதிப்புரையும் வருவதானல் பலர் சம்மதிப்பார்கள்.

உடன் வானெலி புகழ் பத்திரிகை புகழ் என்றமதிப்புரையும் வரும் அத்துடன் அவர் சுவாமியாகியே விடுவார் அப்படி எல்லாம் புகழ் பெற நாம் சொல்லப் போகும் சிவத்தியானம் வாய்ப்பழிக்காதே! ஆதலால் மக்கள் சமுதாயம் விரும்பாவிட்டாலும் நாம் சொல்லியேயாக வேண்டும், ஏனெனில் அது தெய்வத்தின் திருவுள்ளமாகவே நாம் இதனைக் கைக்கொண்ட படியால் சொல்லவே வேண்டும், சிவத்தியானம் செய்வதற்கு மனிதர்க்கு முதல் தூய்மை வேண்டும். வாக்கில் தூய்மை உடலில் தூய்மை அடுத்து மனதில் தூய்மை. ஏனெனில் இந்த மூன்றும் தூய்மையாக அமைந்தால் தான் சிவத்தியானம் கைகூடும். இந்த மூன்றும் கை கூடிடவெனில் முதல் மனதில் கரவு இருக்கக் கூடாது. எவருடனும் உண்மையாக நேர்மையாகப் பேசப் பழகிக் கொள்ள வேண்டும். அடுத்து இரக்கம் தயவு முதலியன நாம் கைக் கொண்டிட வேண்டும் யாரையும் ஏமாற்றவோ அல்லது தனது பொருள் பற்றி எண்ணவோ அல்லது தனது சுகவாழ்வை முன்னிட்டு பிறரைத் துயர்படுத்தவோ கூடாது. இந்த வகை பல நல் ஒழுக்கங்கள் மேற் கொண்டிட மனம் வாக்கு உடம்பு மூன்றும் தூய்மை பெறும். இவை தூய்மை பெறத் தூய்மை பெற மனதில் தன்னை அறியாததொரு சாந்தி ஏற்படும். அந்நிலையில் தான் சிவத்தியானம் நமக்கு கைகூடிடும். அதாவது மேல் நிலையில் உணர்வு கூடிட இறைவன் அருளால் நாம் வேண்டியது பெறலாம்.

இன்று நமது சைவ மக்கள் யாவர்களேனும் காரக்கால் அம்மையார் வரலாறு செவ்வனே விளங்கிக் கொண்டனரோ என்று சொல்ல முடியாது. அம்மையினது சிறப்பை சேக்கிழார் காண்பிக்கின்ருர். உதாரணமாக கணவனுர்க்கு மாங்கனி வேண்டுகின்ற போது விடையவர் தாள் தம்மனம் கொண்டு உணர்தலுமே என்று கூறி அந்த மெய் மறந்த தியானத்து மாங்கனி ஒன்று அவர் கரத்து வந்து இருந்தது என்று சொல்கின்ருர். இந்த ஒரு நிலை அன்று மட்டும் நினைத்தமையால் வந்தது என நாம் நினைந்திட முடியாது. நெடுகவும் அம்மையினது வாழ்வில் சிவத்தியானம் ஒரு செயலாகவே அமைந்திருக்க வேண்டும். அடுத்து கணவன் இவரைத் தெய்வமென உணர்ந்து வணங்கி நீக்கிய பின் உடன் அம்மை இறைவனை நினைந்து பேய் வடிவம் வேண்டிட அது வந்தபொழுது அதற்கு காரணம் காட்டும் சேக்கிழார் மேல் நிலை

(ம ப பா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வு கூட வேண்டிற்றே பெறுவார் என்று அதன் தன்மையை நன்கு காண்பிக்கின்ருர்.

மேல் நிலையில் உணர்வு சிவத்தியானம் மூலமாகவே பெறலாகும். அதுவும் நாளும் நாம் அமைதியுடன் செய்துவரும் சிவத்தியான மூலமே பெறலாகும். இதற்கு முன்பு இந்தவகையை ஆலயங்கள் வகுத்துத் தந்தன. இன்று சொற்பொழிவாளரும் பிரசங்கியளும் ஐயர் மாரும் சில ஆசிரியர்களும் ஆசிரியைகளும் வியாபாரிகளும் வேடிக்கையை விரும்பும் வீணர்களும் கோவிலை தங்களது புகழை நிலைநாட்டும் ஓர் கலை நிகழ்ச்சிக்கு உரிய இடமாக்கி விட்டனர். அங்கு அமைதிக்கு இடம் கொடுக்கப் படவே இல்லை. முழுவதும் ஆரவாரமும் வியாபாரமுமாகவே நடக்கிறது.

இந்த சிவத்தியான அருமையை இன்னமும் சம்பந்தப் பெருமான் சொல்லும் போது **சிந்தியா எழுவார் வினை தீர்ப்பரால்** என்கின்ருர். எவ்வளவு தூய்மையான வார்த்தைபாருங்கள் தீமையை நீக்கிட வழி இதுவன்றி வேறில்லை.

நாள் தோறும் அமைதியாக உமது இல்லத்திருந்து கொஞ்சநேரம் அவரை நினையுங்கள். தியானியுங்கள். என்றே அப்பெருமான் வடிவம் கூட நீர் தியானிப்பதற்கு இலகுவாக அமைய அங்கையில் அனல் ஏந்தினவர் கண்டம் கறுத்திருக்கின்ருர். சுடுகாட்டுப் பொடி பூசியவர். தாயும் இல்லைத் தந்தை இல்லை. சுடராகி உம்முள் விளங்குவான் எனவும சொல்லி இருக்கின்ருர்.

அடுத்து சிவத்தியானத்து மகிமை பற்றித் திருமூலநாயனுரும் ஒரு பாடல் சொல்கின்ருர். அதை கீழேதருகின்றேன்.

செல்வங் கருதிச் சிலர்பலர் வாழ்வெனும்
புல்லறி வாளரைப் போற்றிப் புலராமல்
இல்லங் கருதி இறைவனை ஏத்துமின்
வில்லி இலக்கெய்த விற்குறி யாமே.

உமக்கு பொருள் வேண்டும் செல்வம் வேண்டுமென எண்ணி; சிலராயிருந்தாலும் பலராயிருந்தாலும் தமது செல்வமே அதிகாரமே உத்தியோகமே மேலான பொருள் என எண்ணியிருக்கும் கீழ்மையான அறிவுடையாரை எண்ணி நீங்கள் போற்றிப் புகழ்ந்து மாலை போட்டு விருந்து வைத்து வாட்டமுருமல் உமது உடம்பினுள் உள்ள உத்தம ஒளியை அடையக் கருதிச் சிவனைப் போற்றுமின் போற்றினுல் உண்மையான வில்வீரன் இலக்காக எய்தது போன்று இந்த ஊன் அடைந்த உடம்பு எடுத்த பெருய பயன் உமக்கு வந்து கைகூடும்.

சிவன் அருளைப் பெறவிரும்பின் சிவத்தியானம் மிக அவசியம் ஓரிடத்திலே அமைதியாக இருந்து கொண்டு நாள்தோறும் தியானம் பயின்றுவர அது மிகவும் சிறப்பாக ஓங்கி பின்னர் காண்கின்றபுலன் கட்கும் எட்டாத தொரு இன்பநிலையைத் தந்து நிற்கும்.

யோக சுவாமிகள் சிவத்தியானத்தின் பெருமை பற்றிய சொல்லியருளிய அமுதவாக்குகள் கீழே தரப்படுகின்றன

# சிவத்தியானம்

குரங்குபோல் மனங்கூத்தாடு கின்றதே.

இதன் கூத்தை எப்படி அடக்குவது என்று தெரியவில்லையே. நன்று சொன்னுய். இதற்கு நல்ல மருந்து உன்னிடம் உண்டு. நீ அதை மறந்து போனுய். சொல்லுகிறேன் கேள்.

சிவத்தியானம் என்னும் மருந்தைத் தினம் தோறுஞ் சாப்பிட்டு வா. மனக்குரங்கின் பிணி மாறும்.

அதைச் சாப்பிடும் போது அனுபானத்தைக் கூட்டிச் சாப்பிடு. அதுவும் உன்னிடம் உண்டு.

அது என்ன என்ருல்; நாஅடக்கம், இச்சை அடக்கம் என்னும் சரக்கோடு சேர்த்துச் சாப்பிடு.

இதுவும் போதாது.

பத்திய பாகத்திலே தான் முற்றும் தங்கி இருக்கிறது; அதுவும் உன்னிடம் உண்டு.

அது என்ன என்ருல்: மிதமான ஊண், மிதமான நித்திரை, மிதமான தேக அப்பியாசம் என்பவையே. வெற்றி நிச்சயம்,

ஆன்ம இலாபத்தின் பொருட்டு இதைச் செய்.

மனத்தை ஒருவன் அடக்கி வெற்றி கொள்ள முழுமனத்தோடு விரும்புவானுனுல் சிவத்தியானத்தைத் தினந்தோறும் செய்து வரக் கடவன்.

படிப் படியாக அவன் மனம் ஒடுங்கி வருவதை அவன் கண் கூடாகக் காணுவான்.

சாந்தம், பொறுமை, அடக்கம் முதலிய நற்குணங்கள் அவனிடத்து உதிக்கும்.

அவன் மனம் எந்த நேரமும் மகிழ்ச்சி உடையதாகவே இருக்கும். இகழ் புகழ் இரண்டினுலும் இழிவு அடையான், அந்தர ஆத்மாவிலே சுகிப்பான். பிறர் சுகம் தன் சுகம் என்ற எண்ணம் பெருகும்.

கைவிளக்கை ஒருவன் கொண்டு செல்வானுனுல் இராக் காலத்தில் அவன் மனம் கலங்குவானு? கலங்கான். அப்படியே சிவத்தியானத்தைச் செய்து வருவானுனுல் மாயவிருள் அவனை அடையுமா? அடையா.

போதனையிலும் சாதனை சிறந்தது.

ஒரு பொல்லாப்பும இல்லை.

ஆன்ம இலாபமே பொருள் எனக் கண்ட அறிஞர் அநித்தியமான இந்த உலக இன்ப துன்பத்தின் மயங்காது தாமரை இலையில் நீர் போல் உற்சாகத்துடன் கூடி வாழ்வார். ஆன்ம இலாபத்தைப் பெற நினையாதவர் இந்த உலக இன்ப துன்பத்திஞற் கலங்கி இயங்கித் திரிவார்கள். ஆன்ம இலாபத்தையே குறிக்கோளாகக் கொண்டு நன்மை தீமையை வென்று நான் என என்னும் அகங்கார மமகாரங்களைக் களைந்த அறிஞர் இறைவன் திருவடி நிழலில் பிறப்பு இறப்பு அற்றுப் பேரின்பத்துடன் வாழ்வார்.

அஃதறியா அறிவிலிகளோ துன்பக் கடலிலே வீழ்ந்து எரிவாய் நிரயத்துக்கு ஆளாவார்.

வண்டுகள் பூவைக் கிண்டித் தேனை உண்டு ஒன்றும் அறியாது கிடப்பது போல் பக்தனும் சித்தமாகிய பூவைக் சிவத்தியானத்திஞல் கிண்ட அங்கு வரும் ஆனந்தத் தேனை உண்டு ஒன்று இரண்டு, நன்று தீதென்று அறியாமற் தேக்கித் கிடக்கிருன்.

(இவை இக்கட்டுரைக்கு மூன்னுள் நீர்ப்பாசன மின்சத்தி நிரந்தரக் காரியதரிசி ம.ஸ்ரீகாந்தாவிஞல் தந்துதவப் பெற்றது.)

---

# வறுமையின் வெகுட்சியோ

சில நாட்களுக்கு முன்பு நான் வீதியால் சென்று கொண்டிருக்கும் வேளை ஒருவார்த்தை கேட்டுத் திடுக்கிடும் படியாக இருந்தது.

நான் போய்க் கொண்டிருந்த வழியால் மூவர் என் முன்னுல் சென்று கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர் வயதால் மூத்தவர் இருவர் இளைஞர்கள். மூவரும் தம்மில் பேசிக்கொண்டு செல்லும் போது வயதால் மூத்தவர் மற்றவர்களை நோக்கி எடே தம்பியவை எங்கடை தமிழன் இவ்வளவு அடிவாங்கியும் அவனுக்கு உணர்வு வாவில்லை. நானும் தமிழன் தான் ஆனுல் இவங்கள் இதேன் வந்தது என்று சிந்திக்கின்ருனில்லை, பாருங்கோ பசித்து வருபவனுக்கு ஒரு பிடி சோறு கிள்ளிக் கொடுக்க மனம் வராது. காருலை ஆரையும் அடிச்சுப் போட்டு நில்லாமல் ஒடுவான். அது கிடந்து துடிக்க ஒருவனும் திரும்பிப் பாரான். ஆனுல் இவ்வளவு காசையும் மனம் வந்து இந்த பாட்டுக் கச்சேரிக்கு அள்ளிக் குடுக்கிருனே! என்ருர். அந்த இளைஞர் அது கேட்டுச் சிரித்துக் கொண்டு அண்ணை அவை காசு வைச்சிருக்கிறவை குடுத்து என்னத்தையும் செய்யட்டன் உனக்கேன் வயிறெரியுது?

ஐயோ தம்பி அதில்லையடா! ஒன்றைச் செய்யத்தான் வேணும்! இல்லை என்று சொல்லவில்லை, ஆனுல் பதினுயிரக் கணக்கில் ஒரு மணத்தியாலம் கேட்டுத் தலையாட்டுறத்திற்கே கொடுக்க வேண்டும். முதல் மற்றச் சாதிக்காறன் எங்களை என்னென்று நினைப்பான். நாங்கள் ஒரு வெருளியள் ஏமாத்துக் எடுபர்றவர் என்றெல்லே நினைப்பான். இவங்கள் இவ்வளவு காசையும் சிலவழிச்சு கண்ட மிச்சமென்ன சொல் பார்ப்பம் என்ற கேள்வியை எழுப்பினுர் வயதால் முதிர்ந்து வறுமையாலும் வாட்டமுற்ற கோலமுடைய வயோதிபர். நான் அது கேட்டு அவர்களையும் முந்திக் கொண்டு என் சயிக்கிலில் வேகமாகச் சென்றேன்.

---

# கோவிலில் பாதகத்தைப் பெருக்குவோர் பதைப்புகள் சிலதில் ஒன்று

## சிவத்தமிழ் செல்விகட்கு இரங்குவார்கள் மொட்டைக் கடிதம் இதுவே.

(சந்திரதீபத்தில் தேவையில்லாவிடயங்களை தணிக்கை செய்யவிரும்பும்)
(நல்லவர்கள் அவமானத்தை தாங்காத அன்பன் கடிதம்)

சந்திரதீபம் ஆசிரியர்
வை. நல்லையா அவர்கட்கு

தீபத்தில் வரும் நாயன்மார்களின் சிறப்பைப் பற்றியும் தேவாரம் திருமுறைகளையும் பிரசுரித்து சமயத்தையும் வளர்க்கின்றீர்கள். அதற்கு ஒரு ''சபாஸ்'' போடுகிறேன். மற்றைய விடயங்களை நினைத்தால் உங்களைப் பற்றியும் பாவமாக இருக்கிறது. நீங்கள் தாக்கி எழுதும் பெரியவர்களைப் பற்றியும் பாவமாக இருக்கிறது. சில புகழுக்காக பட்டம் வேண்டும் புல்லுருவிகள் சிலருடன் ஏன் ஐயா நல்லவர்கள் சிலரையும் சாடுகின்றீர்? சவர்காரமுதலாளி பற்றி உண்மையிலேயே. முகமூடி கிழித்துக் காட்டப்படவேண்டியது தான். தம்பிரான் சுவாமிகளைப் பற்றியும் எடுத்துக் காட்டப்படவேண்டியாதுதான், ஆலயங்களில் முறையில்லாமல் நடந்து கொள்ளும் அந்தணர்களைப் பற்றியும் எடுத்துக் காட்டப்பட வேண்டியது தான். ஆனுல் சிவத்தமிழ்ச் செல்வியை நாயிலும் கோலமாக எழுதினீர்கள். நீங்கள் படித்தவர் பண்பு தெரிந்தவர் அதுவும் இளைப்பாறிய கூட்டுறவுப்பரிசோதகர் என முத்திரை குத்தப்பட்டவர் நீங்கள் இப்படி ஒரு பெண்மணியை பழிசுமத்தி அவமானப்படுத்தலாகுமா? பட்டம் கொடுக்கும் ஐயரைப்பற்றி கூறினீர்கள் உங்களுக்கு பட்டம் தரவில்லையே? என்ற மனக்கவலையா கவலைவிடுங்கள் நான் உங்களுக்கு பட்டமளிக்க ஏற்பாடு செய்கிறேன் ''வடை'' மாலையும் போடுகிறேன்.
(திகதி பின்னர் அறிவிக்கப்படும்)

முக்கிய விஷயம்

அரசியல் தலைவர்களைப் பற்றியது குறிப்பாக தமிழ்த்தலைவர்களைப் பற்றியும் தேவையில்லாத விஷயங்களிலும் ஈடுபடப்பார்க்கிறீர்கள். இனியாவது கவனமாக எழுதவும் (சில இடங்களில் யாருக்கோ நடந்தது என்ன வென்றும் தெரியும் என நினைக்கிறேன்.)

யாக்கிரதை

மணவறையிலே சத்தியம் செய்து திருமணம் செய்துவிட்டு இப்பொழுது மனைவி மக்களைவிட்டு பதிப்பகத்தில் சமைத்து சாப்பிட்டு வாழும் [illegible] சீர்திருத்தவாதி.

(ஒப்பம் எதுவும் இல்லை இதற்குற்ற பதில் அடுத்த பக்கத்தில் காண்க.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீப மனத்தார்கள் அறியார் தீயவே

(மொட்டைக் கடிதத்து வேதனையால் ஞானசம்பந்தனை நினைந்து திருமுறை கை மறிக்க வெளிவந்த பாடலின் வாக்கியம் இது.)

விளக்கைப் பிடித்தால் இருட்டில் பல சிறுமைத் தொழில் செய்திருந்தார்க்கு கொஞ்சம் வேதனையாகவே இருக்கும். நீதி எது நெறி எது என்று தெரியாது தமது செயலைச் செய்வார் தமது குறைகள் வெளிப்படத் தோன்றும் போது வேதனையால் தம் செயலை வெளிப்படக் காட்டுவாரை கூசாது கொலை செய்யவும் எத்தனிப்பார்கள். அதை நாம் எதிர்பார்க்கத் தான் வேண்டும். அந்த ஒரு பயத்திற்காக நாம் நல்ல நெறியை உலகில் சொல்லாதிருக்கப்போவதில்லை. தொண்டு செய்பவர் நல்லதை மட்டும் சொல்லித் தவற்றைக் காண்பியாது விடுத்தலால் தவறும் நல்லதாகவே எண்ணப்படும்.

கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் ஓர் நெறி நின்ற அந்தணர். மேலான ஞானி. முருகன் தரிசனப் பேறு கிடைக்கப் பெற்றவர். அவ்வாருகிய அந்தப் பெருமானே கந்தபுராணம் பாடிடும் பொழுது தனது குலத்தவராகும் அந்தணர்களின் அற்ப ஆசைகளையும் அதனல் அவர் செய்யும் பேதமைகளையும் காட்டாது விடவில்லை. உண்மையில் நாம் கூட கூசும் படியான விதத்தில் சில பாடல் அமைந்துள்ளது. ஆதலால் அது கண்டனம் என்று நாம் சொல்ல முடியாது. அல்லது தான் அவ்வாறு தவற்றை எடுத்துக் காட்டிடும் பொழுது உலகம் தன்னைக் கௌரவிக்கட்டும் என்றதாகக் கூட இருந்திருக்காது. ஒவ்வொரு கண்டனத்தையும் எடுத்து நாடிஞல் அதில் ஓர் நன்மையும் மக்களின் நலமான உயர்வுக்கு ஏற்படக் கூடிய வழிகளும் இருக்கக் காணலாம்.

இன்னுமோர் கோடி காலம் நாம் இருந்தாலும் இறப்பதே அல்லாமல் பின்னும் இங்கு இருக்கப்போவதில்லை. என்றோ ஒரு நாள் நாம் இறந்தே ஆகவேண்டும். எமக்கு உற்ற உடம்பு நாம் முன்னர் செய்து கொண்ட நல்வினையோ தீவினையோ இரண்டின் பயனுகத் தரப்பட்டது. ஆகவே அந்த நல்வினை தீவினையை உடம்பு அனுபவித்தொழிய அது இறக்கவே வேண்டும். அது எப்பொழுது என்று எவர்க்குமே தெளிய முடியாது வருத்தம் கடுமையாக வந்தால் நான் தப்ப மாட்டேன் என்று தெரிந்தாலும் அதுவும் என்னேரம் என்பது தெரியாது. சம்பந்த சுவாமிகளே யார் அறிவார் சா நாளும் வாழ் நாளும் என்றும் திருநாவுக்கரசரும் இன்றுளேன் நாளை இல்லை இது தானே உலகம் என்றும் சொல்லிப் போற்றிப் போயினர்.

ஆகையால் இரண்டு நாள் இன்னம் கூட இருந்து அநுபவிப்பதற்குகாக நாம நமது கொள்கையை நிறுத்த முடியாது.

உண்மையில் எமது பணி யாரையுமே அவமானப் படுத்தவோ துயருறுத்தவோ கேலி செய்யவோ விரும்பவில்லை. பெரிய புராணத்தை உரை எழுதி அச்சிடும் போது உண்மையாக பெரியவர் யார் என்றும் சிறுமை உடையவர் யார் என்றும் விளங்கிக் கொள்ள முடிந்தது.

நான் ஓர் அரசியல் வாதி அல்ல அல்லது எதற்கும் ஆசை கொள்பவனும் அல்ல. பட்டமோ பதவியோ இறுமாப்போ வேடிக்கையோ விண்ணுணமோ எதுவும் பெற விரும்புபவன். அன்று. மற்றவர் பட்டம் பெற்ருர். அவர் காசு பெற்ருர். அவருக்கு பெருமதிப்பு அதனல் எனக்கு கிடைக்கவில்லையே நானும் படித்தவன் தானே! என்னை ஒருதரும் கவனிக்க வில்லையே என்று கவலைப் படுபவன் அன்று. எனக்கும் உண்மையாக அப்படி ஒரு ஆசை இருந்திருக்கலாம். ஆனல் கொழும்புத்துறை யோக சுவாமிகளின் அருட் கண் நோக்கம் இந்த வகையான எந்த நோக்கத்தையும் கொள்ளமுடியாது தடுத்து வைத்தது. அதுதான் உண்மை.

## தெளிவு குருவின் திருமேனி காண்டல்

என்றபடி உலகில் பெருகும் அற்ப ஆசைகளால் அவாவுண்டு துள்ளிக் குதிக்கும் பேய் மனம் உண்மை ஞானியினது நோக்கத்தால் அன்றி ஈடேற முடியாது.

உண்மையாக யார்க்கும் ஆணையிட்டுச் சொல்வேன் பட்டம் பதவி மோகம் பேச்சு வசீகரம் விலாசம் கோலம் இவை யாவும் எமது அறியாமை என்னும் இருளைப் பெருக்குமே ஒளிய என்ருகிலும் அது நன்மை தராது. இதற்கு சான்ருக என் வாழ்வில் நடந்ததோர் சம்பவத்தின் வரலாறு சொல்கின்றேன்.

சிவதொண்டன் நிலையத்தில் முன்னர் தினம் தோறும் சென்று பெரியபுராணம் கந்தபுராணம் இரண்டிற்கும் பயன் சொல்லி வருவேன். இது கிட்டத்தட்ட 5 வருடம் வரையும் தினம் தோறும் நடைபெறும் செயல். அப்படியாக சிவதொண்டன் நிலையத்திற்கு மாலை 5 மணிக்குச் சென்று இரவு எட்டுமணி வரையில் அங்கு நின்று வீடு திரும்புவேன். இப்படி வருகின்ற காலங்களில் ஒருமுறை கொக்குவில் மஞ்சவனப் பதி' முருகப்பெருமான் சந்நிதியில் இடப்பட்ட பெரிய மேடைமீது நின்று கிருபானந்தவாரியர் பிரசங்கம் செய்வதை கண்டு கொண்டு வரக்கூடியதாக இருந்தது. ஒலிபெருக்கியினல்பல மைல் தூரம் கேட்கக்கூடிய அவரது கணிரென்ற பேச்சும் இடையிடை வேடிக்கைக் கதையும் அதைக் கேட்டு எழும் சிரிப்பொலியும் பாடல்களும் நன்று என் மனதைக் கவர்ந்தன. அப்பாடா சனக்கூட்டத்திற்கு குறைவேஇல்லை. மஞ்சவனப் பதிப்பெருமானை நினையாதாரும் வாரியார் பிரசங்கத்திற்கு பலதூரத்திருந்து வந்திருந்து பிரசங்கம் கேட்டு மகிழ்ந்து போவார்கள். கார்களின் வரிசை சயிக்கிளின் தொகை சமுத்திரம் போன்ற சனத்திரள் இவை எல்லாம் மிகு நன்ருக இருந்தன.

இதை நாளும் நாளும் காணக் காண எனக்கும் ஒரு ஆசை வந்தது. நானும் இப்படி ஒரு பிரசங்கியாரக வரக்கூடாதா? நானும் கொஞ்சம் படித்திருக்கின்றேன். எனக்கும் சாரீரம் நன்று. அப்படியாயின் இந்த மாதிரி ஓர் சிறந்த பேச்சாளனுக வருதற்கு என்ன செய்யலாம். வாரியாரிடத்து முருகன் அருள் உண்டு. அவா வந்த பின்தான் மஞ்சவனப் பதி முருகப்பெருமான் அருள் பெறுகிருர். அவ்வளவு சனத்தையும் தனது சந்நிதானத்து மஞ்சவனப்பதி என் அப்பன் காணுகின்ருன். இல்லாதிருந்தால் சாமி காவவும் ஆள் இல்லை. இந்த ஊர் மக்கள் உண்மையில் அவரைக் கூப்பிடிச்சது பெரியசெயல் என்று வாரியார் பெருமையும் பாராட்டி இல்லாதிருந்தால் மஞ்சவனப்பதி முருகப்பெருமானை ஒருவரும் திரும்பிப் பாரார் என்ற அவரது திறமையும் சேரக்காட்டி பிரசங்கம் கேட்டு மகிழ்ந்து வீடு செல்லும் மக்கள் சமுத்திரம் பேசிச் செல்வதைக் கேட்கக் கேட்க எனக்கும் பிரசங்கம் செய்யும் ஆசை இன்னும் இன்னும் பன்மடங்கு பெருகியது.

கந்த புராணம் பெரிய புராணத்திற்கு மணிக்கணக்காக இருந்து பயன் சொன்னுல் வாசிப்பவருடன் கேட்பதற்கு ஆகக்கூடியது 25 பேர் ஆணும் பெண்ணுமாக இருப்பார் அதில் அரைவாசிக்கு மேலே நித்திரை கொள்ளும். அப்படியாயின் இந்த பயன் சொல்வதுடன் பிரசங்கம் செய்தால் சனம் சுடைசிவாரியாருக்கு குவியும் குப்பலில் ஆபிரத்தில் ஒரு பங்குதானும் எனக்கும் வருந்தானே. இதற்கு என்ன செய்யுறது. யோகசுவாமிகளிடம் சென்று இதற்கு ஓர் அருளைப் பெறுவோம். எல்லார்க்கும் அருள் செய்வது எனக்கேன் இதற்கு அருள் புரியக்கூடாது? என நினைந்து ஓர் நாள் இந்த நினைப்புடன் நான் சுவாமிகளிடம் சென்றேன். சென்று மௌனமாக நின்றேன். சுவாமிகள் சிலருடன் கதைத்து இருந்தது என்னை விறுக்கென நோக்கி அப்ப நீயும் ஒருபண்டிதனுக வரப்போருயோ! எனக்கேட்டார். நான் திகைத்துப்போனேன். எட இஞ்சைபார் நான் என்னவோ நினைத்து அருள் பெற வந்த எனக்கு கிடைத்த மறுமொழியை சரி சரி இன்ருேடு இந்த ஆசை உனக்கு வேண்டாம். புகழும் பேச்சு வசீகரமும் உண்மை ஒளியாம் சிவனை அறிவதற்கு இடைஞ்சல் சுவாமி என்ன அற்புதமாக என் மன அழுக்கை நீக்கினர் என எண்ணிவணங்கிக் கொண்டு அங்கிருந்தும் நீங்கினேன்.

இதுமட்டு மன்று இன்னுமொரு முறை ஒரு நண்பர் ஒருகதை சொன்னவர். அதுதான் முன்பு ஒரு நாள் வடக்கிருந்து ஓர் சந்நிதானம் யாழ்பாணம் வருகை தந்தது. அவர்க்கு ஊர் ஊராக அமோக வரவேற்புகளும் சொற்பொழிவுகளும் நிகழ்ந்தன. அப்பொழுது அவரை வரவேற்பதில் முன் அணியில் நின்று செயல்பட்ட யாழ்ப்பாணத்தில் உள்ள தொரு வித்தியாலய அதிபர் அந்த மகாசந்நிதானத்தையும் அழைத்துக் கொண்டு யோக சுவாமிகள் ஆச்சிரமம் சேர்ந்தார். பெரியவர் என்ற முறையில் சந்நிதானம் யோக சுவாமி முன்பிருக்க வித்தியாலய அதிபர் இடை நின்று அவரை யோக சுவாமிக்கு அறிமுகம் செய்து சொன்னர் சுவாமி சந்நிதானம் தென் இந்தியாவில் பெரும் தொண்டு செய்பவர் அப்படி இப்படி என்று அவர் சேவையை எடுத்து மொழிந்து அடுத்து இங்கும் வந்து சந்நிதானம் எவ்வளவோ சேவை செய்ய முன்வருந்திருக்கிருர். இங்கு காலையில் இருந்து மாலைவரையும் ஒரே நிகழ்ச்சிகள் இதற்கிடையில் இங்கும் வந்தார் என்ருர். அது கேட்ட யோக சுவாமி வித்தியாலய அதிபரை நோக்கி இங்கு பார் இத்தகைய பெரிய சந்நிதானத்தை நான் காணமுடியாது நீ மறைகிருயே! சீ நீ மறையாதே! என்று "சற்றே விலகி இரும் பிள்ளாய் சந்நிதானம் மறைக்குதாம்" நீ என்ற கோபால கிருஷ்ணபாரதியாரின் நந்தனர்கீர்த்தனையில் ஒன்று பாடி சந்நிதானம் அருகிருந்து அறிமுகம் செய்த முன்னணி அன்பரை விலத்தி இருக்கச் சொன்னுதாக அக்கதை சொன்னர்.

நான் கேட்டதும் ஐயோ அன்று ஒரு சந்நிதானம் பகலிலே சிவிகையில் ஏறி முன்னல் தீவட்டி முதல் திருவோலக்கமுடன் செல்ல அது கண்டு ஓர் சாது பட்டகட்டையில் பகற்குருடன் போருன். என்று விளங்கப்படுத்தினுலும் இன்னும் அவர்கள் விளங்குவார் இல்லை. இன்று இதுவா அனுபவசித்தாந்தம் என்று என் மனதில் எண்ணிக் கொண்டேன்.

ஆதலால் ஒருவடைய செயல் உயர்வு கல்வி மேம்பாடு எல்லாம் ஊழின்வலி அதை நீக்கமுடியாது. இதனைத்தான் வள்ளுவரும்

**"இருவேறு உலகத்து இயற்கை. திருவேறு தெள்ளியர் ஆதலும் வேறு"**

என்று சொன்னர். அப்படிச் சொல்லும் திருவள்ளுவரை உம்மை ஆர் இப்படியெல்லாம் சொல்லச் சொன்னது என்று அவரைச் சுடப்போகலாமோ? அடுத்து சேக்கிழார் பெரிய புராணத்து ஓரிடத்து

**"சைவமெய்த் திருவின் சார்வே பொருளெனச் சாரும் நீரார்"**

என்று திரு நீலகண்ட நாயனுரைச் சிறப்பிக்கின்ருர். சைவமெய்த்திரு என்ருல் என்ன? அதையாரும் விளங்கிக் கொண்ட

தொடர்ச்சி 8 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீப மனத்தார்கள் (7ம் பக்கத் தொடர்ச்சி)

னரா? எத்தனையோ பட்டங்களைப் பெறுவாரை நாமும் இவர் சைவமெய்திருவின் சார்வை விளங்கிக கொண்டு சார்கின்ருர். என்று சொல்லலாமா?

சைவம் என்ருல் என்ன விளங்குமா? சைவம் என்பது சிவத் தொடர்பு சம்பந்தம் என பெரியயோர் மொழிவர். சிவம் என்ருல் யாது! கண்டனரா! அத்துடன் சம்பந்தமாவார் எப்படி இருப்பார். இது யாருக்கும் விளங்குமா?

மேடை மீது பெண்களைக் கூப்பிட்டு வைத்து பிரசங்கம் செய்வித்து மகிழ்ந்து அதற்கு சன்மானமாக அப்பெண்ணுக்கு பொன்னுடை போர்த்தி மாலை போட்டு புகழ் பாராட்டி பட்டம் கொடுத்து யாரேனும் சிவசம்பந்தமானர் என்று சொல்ல முடியுமா?

அடுத்து காரைக்கால் அம்மை மங்கையர்க் கரசியார் திருநீலகண்ட நாயனர் மனைவியார் இயற்பகையார் மனைவியர் இளையான் குடி மாற நாயனர் மனைவியார் திருநீலநக்க நாயனர் மனைவியார் இவர்கள் எப்படி நடந்தனர். இன்று பெண்களை கோவில் முன் அழைத்து நீர் என்செய்கின்றீர். ஒர் பெண்ணை அவளது கணவன் அன்றி வேறேருவர் தீண்டக் கூடாது. அல்லது பாராட்டக் கூடாது. அது பதிவிரததர்மத் திற்கு பாதமாக விளையும் என்று பெரியோர் கொள்கின்றனர். இன்றுள்ள பெண்களை நீங்கள் மேடைமேல் ஏற்றி பேசுவித்து பாடுவித்து பொன்னுடை போர்த்து பட்டம் கொடுப்பது நன்றல்ல சைவப்பண்பிற்கு சைவமெய்த்திருவிற்கும் பங்கமாகும் எமது இளம் சமுதாயத்தின் முன் இவர்களை ஆண்கள் மாலை போட்டு கௌரவித்துக் காட்டினல் சைவத்திற்கு உகந்தானதல்ல, அதுவும் கோவில் சந்நிதானத்தில் அப்படிச் செய்வது தகாது என்று நாம் சொன்னல் பதில் என்னைச் சுட்டுக்கொல்ல எத்தனிப்பதா? சுட்டுக் கொல்ல எத்தனிக்கும் அம்மனம் கோவில் சந்நிதானமாக இருந்தாலும் ஒருபெண்ணிற்கு மாலை பட்டம் ஆடை போடும் பொழுது நினைப்பு எப்படியாகும் என்பது தெரியாதா? இந்த வகை மனதில் நிய எண்ணங்கட்கு இறைவன் சந்நிதியில் இடங்கொடுக்கக் கூடாது என்றதற்காகத்தான் நமது முன்னைப் பெரியோர்கள் பெண் இனத்தை ஒதுக்கமான இடத்தில் வைத்து மிகு மரியாதையாகவும் கௌரவமாகவும் பேணினர்.

சின்னமேளம் கோவில் கூடாது என்று கூக்குரல் போடுவீர் பெண்ணினத்தை மேடை ஏற்றி பிரசங்கம் செய்வித்து மாலை போடுவது நன்ருகுமா? அரசியல் தலைவர்களைச் சாடுவதாக குற்றம் சாட்டுகிருர் மொட்டைக் கடித மனிதர். ஆனல் அரசியல் வாதிகட்கு சில நன்மைகளை எடுத்துச் சொல்லியுள்ளேன். இப்படி இப்படியாக நீவீர் நடந்தால் எமது தமிழினம் சுதந்திரம் அடையும். வெளியாக சிலநெறிகளைக் கடைப்பிடிப்பதின்றி அகத்தில் தூய்மையுடன் நாம் தவவழியைக் கடைப்பிடித்தால் நிச்சியமாக நாம் சுதந்திரமடைவோம் என்றது உண்மை.

நானும் ஓர் தமிழன், சாதாரணத் தமிழன் அன்று. சிவநெறியின் உண்மையும் சீலமும் விளங்கிக் கொண்ட தமிழன். எமது இனம் சில நெறி தவறி ஒழுகுவதால் வரக் கூடிய ஆபத்துகளை நேரில் கண்டு தெளிந்து இதுவன்று வழி இது தான் வழி என்று சொன்னேன். எனக்கும் இந்த தமிழினம் இனியும் அடி வாங்காது நல்நிலைப் படவேண்டும், சுதந்திரமாக மரியாதையாக வாழவேண்டும் என்பது விருப்பம். இதற்காக இதுதான் நன்மை என்று நல்வழி சொல்லும் என்னையும் சுட்டுத்தொலைக்க வேண்டுமென்று அரசியல்த் தலைவரோ அன்றி அவர்க்காக அவர் எதிரிகளாகக் காதப்படுவாரைச் சுட்டுத் தொலைப்பவரோ என்னையும் தாராளமாகச் செய்யலாம்.

நெஞ்சில் உரமும் இன்றி நேர்மைத் திறமும் இன்றிவஞ்சனை செய்வாரடி கிளியே வாய்ப் பேச்சில் வீரரடி என்று பகவான் பாரதியார் சொல்லியுள்ளார். அப்பெருமானுடைய சுதந்திரதாகம் தான் தெய்வீகமான தாகம்.

முன்பு நான் சிறுவயசாய் இருக்கின்ற போது பாரதியாருடைய பாடலை நன்கு மதிக்கவில்லை. எனென்றல் அவருடையது என்ன ஒரு சாதாரண பாடல். அதில் என்ன இருக்கின்றது. அடுத்து இவர் ஒரு சைவர் போலத் தெரிய முடியவில்லையே என்று நினைந்திருந்தேன். ஆனல் ஒரு நாள் யோக சுவாமியிடம் போக என்னைக் கண்டதும் உடனே பாடத்தொடங்கினர்.

தீராத விளையாட்டுப் பிள்ளை, கண்ணன் தெருவிலே பெண்கட்கு ஓயாத தொல்லை, தின்னப் பழங்கொண்டு வருவான்... என்றெல்லாம் பாடி முடித்து அப்படிப் பாடினர் காணும் பகவான் பாரதியார் என்று அழுத்தமாக பாரதியார் என்ற சொல்லிற்கு முன் பகவானையும் சேர்த்துச் சொன்னர் நான் திகைத்துப் போனேன். ஏன்என்ருல் பாரதி பெரியவன் உறுதி உடையவன் என்று நீ நினை. வெளிக்கோலத்தில் குறிவடிவாக எழுதியிருப்பார் வாய்ப்பேச்சில் நன்ருக இருப்பார் அங்காலும் இங்காலும் பார்த்து ஒரு தட்டுத் தட்டி ஆட்களையும் எழுப்பிவிட்டு கூத்தாடச் செய்வார்கள் சைவரல்ல என்பது பொருளாகக் கொள்ளப்பட எனக்கு அறிவுறுத்தியதுபோலும்

துரோபதி துகிலுரிந்த சரித்திரத்தை எவ்வளவு நயமாக 'உலகினை மறந்தாள் அன்னை ஒருமையுற்ருள்' என்று வருணித்து எம்மை தவநெறிக்கு ஆளாக்கி வைக்கின்ருர் பகவான் பாரதி

அடுத்து இன்று வெளியில் திரு நீற்றுக்குறியும் வடிவான வேட்டியும் கட்டி உள்ளம் துச்சாதனனைப் போன்று கோவில் கும்பிட வந்த கன்னிப் பெண்ணை பிரம்மனிவியை ஆட்கள் இல்லாத நேரம் மூர்த்தியின் முன்னல் கையில் எட்டிப் பிடித்து இழுத்து ஏதோ செய்த வரலாறுகளும் சில உண்டு. மடப்பள்ளியில் குடும்பமாக வாழ்ந்து அங்கே சமைத்து நைவேத்தியமும் செய்து இரவோடு இரவாக தங்கள் சமையலும் செய்யும் அறிவாளிகளான அந்தணர் எம் நாட்டில் சிலர் உண்டு.

திருநாவுக்கரசர் பெருமான் தமது ஒரு தேவாரப் பதிகத்து கடவுள் எங்கிருக்கின்ருர் எனக்காண்பிப்பராய்.

மடவார் கடைக்கண் நோக்கில் துளங்காத சிந்தையராய் துறந்தோர் உள்ளத்து பெரும் பயனை என்று கூறியருள் இன்ருர் இது மட்டோ திருஞானசம்பந்தப் பெருமான்

### "கற்றவர் காய்வது காமனையே"

எனக்கூறியருளிட இன்று கடவுள் இருப்பிடம் எனக்கருதப் படும் ஆலயங்களில் ஐயர்மாரும் அவருக்கு இணைந்தவரும் செய்யும் தத்தமது கீழ்மைச் செயலால் அந்தக் கோவிலில் தெய்வம் சாந்நித்தியம் கொள்ளுமா?

இந்த ஒருவாக்கியத்தை எமது பிராமண சமுதாயமோ அல்லது பெண்களைக் கொண்டு வந்து மேடை ஏற்றி பொன்னுடை போர்த்து பட்டம் கொடுத்து அவர்களுடைய பதி விரதநெறியை கெடுக்க முயலும் பாவிகள் உணர்வார்களா? சரி பெண்ணை பாடப் பேசக் கொண்டு ஆட்களை கோவிலுக்கு வரச்செய்வதற்காக மேடையில் ஏற்றினீர். அவ்வளவுடன் நிறுத்திக் கொண்டு மரியாதையாக அனுப்புதல் தானே முறைமை

ஒரு கருமத்தை தேவசந்நிதானத்தில் செய்யும் போது மிகு மரியாதையாகவும் பயபத்தியுடனும் செய்ய வேண்டும். நாம் செய்வது திருவருளின் சம்மதமாமோ என்று அறிந்து செய்ய வேண்டும். அது அல்லா விட்டால் ஆகமம் சொன்ன வழி செய்ய வேண்டும். சிவன் அருள் பெற்ற முன்னைப் பெரியோர் நடந்து கொண்ட விதங்களை நாம் உணர்ந்து செய்ய வேண்டும் அது ஒன்றுமில்லாது கோவிலில் ஆட்கள் திரளுவதற்காக கண்டபடி சீலம் இல்லாத செயல்களை சீலம் விளங்காத மக்கள் தங்கள் இட்டப் படி கோவில் சந்நி தானத்தில் முறைபற்ற செயலைச் செய்யத் தலைப்பட்டால் நாம் அதை ஒரு போதும் பார்த்திருக்கப் போவதில்லை.

ஒலி பெருக்கி கோவிலில் வேண்டாம் என்று சொன்னதும் இதே காரணமாகத்தான். ஒலி பெருக்கியை இறைவன் சந்நிதானத்தில் பாடும்படி இடங்கொடுத்தால் அங்கு நல்ல பாடலுடன் சில மிகவும் வெட்கக் கேடான பாடலும் போடப்படுகின்றது. உதாரணமாக மேல் உள்ள வரலாற்றில் தரப்பட்டது போல்.

ஆசை மச்சானே என் அருமை மச்சானே.

மாலு மாலு மாலு மாலு சுருங்கனிக்க மாலு

நான் உன்னை அழைக்கவில்லை என் உயிரை அழைக்கிறேன்.

மெதுவா மெதுவா தொடலாமா உன் மேனியிலே கை படலாமா.

அவள் பறந்து போனளே என்னை மறந்து போனளே.

தொட்டுத் தொட்டுப் பேசச் சுகமாய் இருக்குதுங்க தொட்டால் போதும் பத்தாம் மாதம் தொட்டில் ஆடுதுங்க.

வந்து வந்து போறியோ மச்சாள் வயிற்றைப் பத்தி எரியுதே மச்சாள்

இவை எல்லாம் எதைக்குறிக்கின்றன. இப்பாடல் மூலம் கடவுள் அருளைப் பெறலாமா? அன்றி இதைப்பாடிய பின் தானே மைக்கில் சிவத்தமிழ் செல்வி சீர்காழி ஓதுவாமூர்த்தி திருமுருக கிருபானந்தவாரியார் மதுரை சோமு இவர்களும் தங்கள் பாடலை பேச்சை நிகழ்த்துவர். இதுவே இன்றைய தவஉலகம் கோவில் என்ருல் இதுவே மிக நன்று. இந்த நிலைக்குதரன். சிவத்தமிழ் செல்வி சீர்காழி திருமுருக கிருபானந்தவாரியார். தாங்கள் ஒலி பெருக்கியில் பேசவிரும்பி கோவிலை இட்டுச் செல்கின்ருர். நன்று அவருடைய தொண்டு போற்றப் படவேண்டியது.

தத்தமது அன்பிற்குப் பாத்திரமான செல்விகளை அவமதித்தேன் என்று என் மீது பதிசுமத்தும் மொட்டைக் கடிதக் குறுப்பினரே நான் உண்மையாக என்றும் உமது செல்விகளை அவமதிக்கவில்லை. சந்திர தீபத்தை முறையாக நீர் ஆறுதலாகப் படியும். படித்துத் தெளிந்து பின்னர் என்னேடு ஒன்றல்ல பல மொட்டைக் கடிதங்களை எழுதும். உலக மக்களையும் என்னையும் வீணை வகையில் இனியும் மாசுபடுத்த நினையாதீர். மற்றைய உம் பேய்த்தனமான கேள்விகளைப் பெரியோர் இனித் தாமாகவே விளங்குவார்.

கோவிலில் சாமி சந்நிதியில் நேர் வைத்து திருமணம் செய்வீர்; திருமணம் செய்யும் போது அங்கு மனநிலை பக்திமையாகவோ இருக்கும்? குருக்கள் கோவிலில் தான் நினைத்தபடி செய்ய லாமா? கோவில் திருமணத் தின்போது பெண் வீட்டார் மாப்பிளை வீட்டார் தத்தமது இல்லத்தில் தயாரித்த சிற்றுண்டிவகை அங்கு பரிமாறப்பட்ட சம்பவங்கள் இல்லையா? இவை எப்படித் தயாரிக்கப்பட்டன மொட்டைக் கடித வீரரே சொல்வீரா? காசு வந்தால் எல்லாம் சரி காசு தான் உமது கடவுளின் தந்தையோ? அச்சா அச்சா அடிச்சு வாங்கும்.

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கு உயரப்புலத்தில் இருக்கும் இலங்கை மணி சைவநூற் பதிப்பகத்தின் சார்பில் அதன் உரிமையாளர் திரு வை. நல்லையா (இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்) அவர்களால் புனிதவனம் அதுதொலிக்க அச்சகத்தில் பிரதிபண்ணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org